# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 14 நவம்பர் - 2001 இதழ் - 11



வெளியிடுவோர்

கிறிஸ்துவின் சபையார்,

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
தமிழ்நாடு, இந்தியா

✆ 04257 - 20030 e-mail : kangayamcofc@eth.net

## அருமையான வாய்ப்பு

பரிசுத்த ஆவியானவரின் பணி (170 பக்கங்கள்) மற்றும் புதிய ஏற்பாட்டு ஆராதனை (112 பக்கங்கள்) ஆகிய நூல்கள், தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, உங்களுடைய உப்யோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது.

பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும், வேத மாணவர்-களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.

புத்தகம் முற்றிலும் இலவசம். ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தகங்கள் அனுப்பப்படும். அனுப்ப வேண்டிய குறைந்த பட்ச தொகை ரூ.20/-.

**தொடர்பு முகவரி**

**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**
தபால் பெட்டி எண் 27,
காங்கயம் - 638 701. இந்தியா.

குறிப்பு: M.O. கூப்பனில் உங்கள் முகவரியைத் தெளிவாக எழுதவும்.

## ஆசானின் அறிவுரையிலே...

| | | |
|---|---|---|
| 1. | ஆசிரியர் உரை | 1 |
| 2. | **வாலிபர்களுக்கு ஒரு முக்கிய அறிவிப்பு** | 9 |
| 3. | நீங்கள் கிறிஸ்துவின் சபையைக் குறித்து ........ | 10 |
| 4. | பெண்கள் பகுதி | 13 |
| 5. | வாலிபர் பகுதி | 15 |
| 6. | நீதிமொழிகள் ஒரு கண்ணோட்டம் | 18 |
| 7. | சிறுவர் பகுதி | 19 |
| 8. | வெளிப்படுத்தின விசேஷம் | 21 |
| 9. | திருமறையில் காணும் மாதிரியின்படி ...... | 29 |

# THIRUMARAI AASAAN

**Published by Church of Christ**

**Editor** **S. RAJANAYAGAM** | **Honorary Editor** **J.C. CHOATE**

Dharapuram Road, Kangayam - 638 701, Tamil Nadu, India

**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol.14** **Novmber 2001** **Issue-11**

ஆசிரியர் உரை

# பாவம் வஞ்சனையானது

"**பா**வம்" என்ற மூன்றெழுத்து வார்த்தை, இந்தப் பார் முழுவதையும் பாடாய்ப்படுத்திக் கொண்டுள்ளது. இதிலே சிக்கி சீரழியாத மனிதனும், இதன் வஞ்சனைக்குத் தப்பிய மனிதனும் ஒருவனும் இல்லை. "**எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாகி**" என்று பரிசுத்த வேதாகமம் கூறுகிறது (ரோம. 3:23).

'பாவம்' என்ற இவ்வார்த்தைக்குப் பல பொருள் உண்டு. பழைய பிரமாணம் எழுதப்பட்ட மொழியாகிய எபிரேயத்திலும், புதிய பிரமாணத்தின் மொழியாகிய கிரேக்கத்திலும் இதற்கு ஒன்றுக்கும் மேலான அர்த்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. 'மீறுதல்', 'அக்கிரமம்', 'குறிதப்பல்', 'வழி தவறுதல்' என்பவை அவைகளில் அடங்கும். பாவத்திற்கு கொடுக்கப்படும் எல்லா விளக்கங்களையும் கவனித்துப் பார்த்தால், ஒரு பொதுவான முடிவுக்கு நாம் வரமுடியும். அதாவது, 'பாவம்' என்பது "**தேவனுக்கு விரோதமாகச் செய்யப்படும் ஒன்று**" என்று. அதிகமான சங்கீதங்களை வடித்துக் கொடுத்த தாவீது அரசனும், அதிக இடங்களில் கிறிஸ்துவின் சபைகள் ஸ்தாபிக்கப்பட்ட காரணமாக இருந்த பவுல் அப்போஸ்தலனும் இக்கருத்தை ஏகமனதாக ஆமோதிக்கின்றனர். (சங்.51:4, ரோம. 8:7).

ஏவாள், ஆதாம் பாவத்தினாலே, பாவம் உலகத்திலே பிரவேசித்தது என்று நாம் பரிசுத்த எழுத்துக்களிலிருந்து கண்டாலும், இதன் ஆரம்பம் பற்றி நமக்கு சரியாக அறிவிக்கப்படவில்லை. ஆதாமும், ஏவாளும் பாவத்திலே விழுவதற்கு முன்பாகவே, அவர்களை வஞ்சிக்கக்கூடிய தன்மையுள்ளதாக சர்ப்பம் இருந்துள்ளது. சர்ப்பத்திற்குள்ளாக இந்தப்பாவம் எப்பொழுது புகுந்தது என்று

நமக்குச் சொல்லப்படவில்லை. சரி, இதன் ஆரம்பம் பற்றி ஆராய்வதைவிட, இதன் விளைவுகளைப் பற்றித் தெரிந்து கொள்வது மிகவும் நல்லது.

பாவத்திற்கு, மனிதனைப் பாழாக்கும் பயங்கரமான தன்மைகள் பல உண்டு. அவைகளில் கொடுமையானது, அதன் வஞ்சிக்கும் தன்மை. பூமியிலே, மனிதனுக்குள்ளாக புகுந்த, முதல் பாவமே, வஞ்சனையான முறையிலே தான் புகுந்தது. அந்த வஞ்சனையிலே 'ருசி' கண்ட பாவம். இன்றளவும் அதே பாணியைக் கையாண்டு வருகிறது. அப்போஸ்தலன் பவுல் பாவத்தினால் தனக்கு நேர்ந்த கசப்பான அனுபவத்தை எப்படி வெளிப்படுத்தியுள்ளார் என்பதைக் கவனியுங்கள்.

"**பாவமானது கற்பனையினாலே சமயம் பெற்று, என்னை வஞ்சித்து, அதினாலே என்னைக் கொன்றது**" (ரோம. 7:11) என்று. தன்னுடைய பழைய வாழ்க்கை குறித்தும், தன்னுடைய பக்தி வைராக்கியத்தைக் குறித்தும், பிலிப்பியருக்கு பட்டியலிட்டுக் காட்டும் பவுல், தான்"........ நியாயப் பிரமாணத்திற்குரிய, நீதியின்படி குற்றம் சாட்டப்படாதவன்" என்று பெருமையோடு சொல்கிறான். (பிலி.3:6). இப்படி, தேவனுக்காக, தேவ நீதிக்காக பக்தியோடும், வைராக்கியத் தோடும் வாழ விரும்பிய பவுலைப் போன்ற திட நம்பிக்கையுள்ளவர்களையே, பாவம், சமயம் பார்த்து வஞ்சித்திருக்கிறதென்றால், அதன் வஞ்சிக்கும் தன்மை எவ்வளவு கொடிதானதாக இருக்கிதறதென்று நாம் எளிதாகப் புரிந்து கொள்ளலாம். வஞ்சித்தது மாத்திரமல்ல, ஆவிக்குரிய ரீதியில் அவனைக் கொன்றும் போட்டது.

வஞ்சித்தல் என்றால் "**தந்திரமான முறையில் ஏமாற்றுதல்**" ஆகும். தன்னால் முடியாததை, முடியும் என்று சொல்லி மனிதனைப் பாவம் ஏமாற்றுகிறது. தனது உண்மைத் தன்மையை மறைத்து, போலியான ஒரு தோற்றத்தை அவன் விரும்பும் வகையில் அவனுக்குக் காட்டுகிறது. அதுதெரியாத மானிடம் அதிலே மயங்கி விழுந்து தன்னை முற்றிலுமாக அழித்துக் கொள்கிறது.

இப்பொழுது, பாவம் மனிதனை ஏமாற்றும் சில வழிகளைக் கண்டு, அதற்கு இரையாகாமல் நாம் நம்மைக் காத்துக் கொள்வோம்.

**I. பாவம் நாம் சொன்னபடி கேட்பதாகச் சொல்லி ஏமாற்றும்:**

எந்த ஒரு பாவமும் முதலில் பார்ப்பதற்கு, "ஐயோ பாவம்" என்பது போலத்தான் தோன்றும். அதாவது, நாம் சொல்கிறபடியெல்லாம் அது கேட்பது போலவும், நாம் வேண்டாம், போதும் என்று சொல்லும்போது, நம்மை விட்டுப் போய்விடுவது போலவும் நடந்து கொள்ளும். அப்பொழுது, நாம் செய்யும் எந்த ஒரு பாவமும் நம்முடைய முழுக்கட்டுப்பாட்டில் இருப்பது போலத் தெரியும். ஆனால், அந்தப் பாவத்தில் அல்லது பாவங்களில் நாம் தொடர்ந்து ஈடுபடும்பொழுது, பாவமானது தனது வஞ்சனையின் மூலம், நம்மையுமறியாமல், அடிமைப்படுத்தி, நமக்கு எஜமானாக மாறும்.

ஆம், பாவம் செய்ய ஆரம்பிக்கும்போது, நாம் விரும்பும் போது மாத்திரம் செய்து வந்த பாவங்கள், சிறிது காலமாகும்போது, தன்னுடைய விருப்பத்திற்கு நம்மை ஆட்டுவிக்கும். சந்தர்ப்பம் கிடைக்கும்போது பாவம் செய்து வந்த நாம், ஒரு கட்டத்தில் பாவம் செய்யும் சந்தர்ப்பங்களைத் தேடி அலைய வேண்டி வரும். துவக்கத்தில், ஒன்றைப் பற்றிய நினைவு வரும்போது மாத்திரம், நாம் பாவம் செய்யும் நிலை இருந்திருக்கும். காலப் போக்கில் நம்முடைய நினைவுகளிலெல்லாம் அந்தப் பாவம் நிறைந்து, நம்மை நிலைகுலைய வைக்கும்.

ஒருவேளை, பாவம் எந்த வகையானதாக இருந்தாலும், அவைகளைச் செய்கிற மனிதன் அதற்கு அடிமையாயிருக்கிறான் என்பது யதார்த்தமான உண்மை. இல்லை, இல்லை நான் விரும்பும்போது மாத்திரமே பாவம் செய்கிறேன் என்று ஒருவன் எவ்வளவுதான் அடித்துச் சொன்னாலும், அவன் அதற்கு அடிமைதான். ஏனெனில், பாவம் மற்றும் அதன் தன்மை பற்றியும், அவைகளைச் செய்யத் தீவிரித்துத் திரியும் மனிதன் பற்றியும் மிக நன்றாக அறிந்த இயேசு ஆண்டவரின் கூற்றைப் பாருங்கள். "**இயேசு அவர்களுக்குப் பிரதியுத்திரமாக: பாவம் செய்கிறவன் எவனும், பாவத்திற்கு அடிமையாயிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்**" என்றார். (யோவா 8:34). மெய்யாகவே, மெய்யாகவே என்று இயேசு சொன்ன வார்த்தைகள் எப்படிப் பொய்யாக முடியும்?

இதே கருத்தை, பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலால், அப்போஸ்தலன் பவுல் ரோமபுரியாருக்கு எழுதும்போது, இன்னும் விளக்கமாகச் சொல்லியுள்ளார். ரோம 6:16-22 பகுதியை வாசித்துத் தெரிந்து கொள்ளுங்கள். எந்த ஒரு மனிதனும் தன்னுடைய வாழ்க்கையில், பாவத்திற்கோ அல்லது நீதிக்கோ அடிமையாயிருக்கிறான். இரண்டுக்கும் இடைப்பட்ட நிலை என்று ஒன்று இல்லை.

அப்போஸ்தலன் பேதுருவும், இக்கூற்றை வலியுறுத்தும் கருத்தைத் தன் நிருபத்தில் சொல்லாமலிருக்கவில்லை. "**தாங்களே கேட்டுக்கு அடிமை-களாயிருந்தும். அவர்களுக்குச் சுயாதீனத்தை வாக்குத்தத்தம் பண்ணுகிறார்கள். எதினால் ஒருவன் ஜெயிக்கப்பட்டிருக்கிறானோ அதற்கு அவன் அடிமைப்பட்டிருக்கிறானே**" (II பேதுரு 2:19). பாவம் செய்கின்ற ஒருவனின் நிலை பற்றி பரிசுத்த வேத எழுத்துக்கள் எவ்வளவு திட்டமும், தெளிவாகச் சொல்லுகிறதென்று பார்த்தீர்களா?

இந்த வசனங்களோடு நம்முடைய வாழ்க்கையை ஒப்பிட்டு, நாம் நம்மைத் தற்பரிசோதனை செய்து பார்த்தால் உண்மை நிலையும் அதுதான் என்பதை சந்தேகத்திற்கிடமில்லாமல் ஒத்துக்கொள்வோம்.

ஆனால், நம்மில் குடிகொண்டு, நம்மை அடிமைப்படுத்தி, ஆட்டுவித்துக் கொண்டிருக்கும் பாவங்களை, நாம் ஆரம்ப நாட்களில் செய்யத் தொடங்கினபோது, என்ன மனநிலையோடு துவக்கினோம் என்பதை கொஞ்சம் நினைத்துப் பார்ப்போம். ஒருவேளை அது புகைப்பிடிக்கும் பழக்கமாக இருக்கட்டும், குடிப்பழக்கமாக இருக்கட்டும், விபச்சாரமாக இருக்கட்டும், சூதாட்டமாக இருக்கட்டும் இன்னும் திருட்டு, பொய், புரட்டு, ஏமாற்று, லஞ்சம், பித்தலாட்டம் என்று எதுவாக இருக்கட்டும், இவைகளைச் செய்ய நாம் ஆரம்பிக்கும் போது, என்ன மன நிலையோடு ஆரம்பித்தோம்? சொல்லுங்கள். அப்படியே யோசியுங்கள். எல்லாமே, தீமை என்று தெரிந்தும், வாலிபத்தில் நமக்குக் கிடைத்த சில சேர்க்கைகளுக்காக, நாம் வேலை செய்த இடங்களில் நிலவிய சூழ்நிலைக்காக, குடும்ப பாரத்திற்காக, ஒரு ஜாலிக்காக, மற்றவர்களின் நிர்பந்தங்களுக்காக அவைகளினால் கிடைக்கும் உடனடி லாபங்களுக்காக, தற்காலிக இன்பங்களுக்காக, இன்னும் விளையாட்டுக்காகவும் கூட அவைகளைச் செய்ய ஆரம்பித்தோம். அப்படித்தானே, கொஞ்ச காலத்திற்கு இருக்கட்டும், பிறகு சூழ்நிலை மாறும்; பிறகு இவைகளையெல்லாம் ஒரு நாளில் ஒழித்துவிடலாம் என்றெல்லாம் மனப்பால் குடித்தோம் தானே.

இப்பொழுது நம்முடைய நிலை என்ன? அதை ஏன் கேட்கிறீர்கள் என்கிறீர்களா? இன்றைக்கு நம்மில் எத்தனைபேர், பாவங்களுக்கு அடிமைப்பட்டு, நம்முடைய வாழ்வை அழித்துக் கொண்டுள்ளோம்? விளையாட்டுக்காக ஆரம்பித்தவை இன்று விசுவ ரூபமெடுத்து ஆடிக் கொண்டிருக்கிறதே எப்படி? அவைகளுக்கு பயந்து நாம் நடுங்கிக் கொண்டிருக்கவில்லையா? விடவும் முடியாமல், வெளியே தெரிந்தால் வெட்கம் என்று எண்ணி பயந்து, பயந்து நாம் நாட்களை நகர்த்திக் கொண்டிருக்கவில்லையா? குடியின் வெறியால் குடிமுழுகிப்போன குடும்பங்களைக் கணக்கிட முடியுமா? புகையின் கொடுமையால் பொலிவிழந்து போன சரீரங்களை எண்ணத்தான் முடியுமா? சூதாட்டத்தால் சூறையாடப்பட்ட சொத்து, சுகங்களுக்கு அளவுதான் உண்டா? விபச்சார மயக்கத்துக்கு விட்டில் பூச்சிகளாகிவிட்டு, ஆட்கொல்லி நோய்க்கு அஞ்சி, அஞ்சி வாழ்ந்து கொண்டிருப்பவர்களை அடையாளம்தான் காண முடியுமா?

சரி. இந்த நிலை எப்படி வந்தது? பாவம், நம்மை வஞ்சித்தது. பாவம் நம்மை ஏமாற்றியது. நாம் விரும்பும் போது நம்மை விட்டு ஓடுகிறேன் என்று சொல்லி, நம்மை நம்பவைத்து, அதனடிப்படையில், நம்மை செயலில் இறக்கி, இப்பொழுது இந்த நிலைக்கு கொண்டு வந்து சேர்ந்திருக்கிறது. பாவத்தின் வஞ்சனை இப்பொழுதாகிலும் புரிகிறதா? தயவு செய்து உணர்வடையுங்கள்.

**II. பாவம் அழகான தோற்றத்தைக் காட்டி நம்மை ஏமாற்றும்.**

ஒருவேளை, அழகு இரசனைக்கு ஏற்றதாக இருக்கலாம். ஆனால் நடைமுறையில் நன்மைக்கு ஏற்றதாக இல்லை. அழிவுக்கும் பெருந்தீமைகளுக்கும், வீழ்ச்சிக்கும் அது ஆதாரமாக இருந்தது என்று சரித்திரம் சாட்சி பகர்கிறது. இதற்கு எடுத்துக்காட்டுகள் ஏராளம் உண்டு. அழகை, ஒரு அழிக்கும் ஆயுதமாக உலகிற்கு அறிமுகம் செய்து வைத்தவன் பிசாசு தான். இவ்வாயுதத்தை அவன் வெகு தந்திரமாகக் கையாண்டு, தேவசாயலோடு சிருஷ்டிக்கப்பட்டு, நித்திய காலமாய் வாழும்படியாய் உண்டாக்கப்பட்ட மனிதனை ஆவிக்குரிய ரீதியிலும், சரீரப் பிரகாரமாகவும் மரிக்கும்படியாகச் செய்தான்.

ஆம் **அப்பாவியாக** இருந்த ஏவாள், அழகிலே மயங்கித்தான் **பாவியானாள்.** சர்ப்பம் சொன்ன விருட்சத்தைக் கண்டபோது, அவளுடைய பார்வைக்கு அது இன்பமாக இருந்திருக்கிறது என்று வசனம் சொல்கிறது.

**"அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதன் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான்.** (ஆதி.3:6) வசனத்தின் கடைசிப்பகுதி அவள் **பறித்துப் புசித்தாள்** என்று கூறுவதைக் கவனிக்க வேண்டும். அதின் கனியைப் பறித்துப் புசிக்க வேண்டும் என்ற ஆவலை, சர்ப்பம் மாத்திரம் தூண்டவில்லை. **விருட்சத்தின் அழகும் சேர்ந்தே தூண்டியிருக்கிறது.**

ஒருவேளை, அந்த மரம் பார்வைக்கு இன்பமாக இருந்திருக்காவிட்டால், ஏவாள் அதின் பக்கமே போயிருக்கமாட்டாள். கனியைப் பறிக்கவும், புசிக்கவும் நேராமல் போயிருக்கலாம். அப்பொழுது, அதைத் தன் கணவனுக்கும் கொடுத்திருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. அப்பொழுது, தேவகட்டளை மீறப்படாமல் இருந்திருக்கும். பாவம் உலகில் வந்திருக்காது. ஆணுக்கும், பெண்ணுக்கும், இந்தப் பூமிக்கும் கடுமையான சாபம் கிடைத்திருக்காது. மானிடம் இந்தப் பூமியில் அல்லல்படாத ஒரு வாழ்க்கைக்குப் பங்காளிகளாக மாறியிருக்கக்கூடும். மனிதனுக்கான தேவதிட்டம், வித்தியாசமாகப் போயிருக்கவும் கூடும். யாருக்குத் தெரியும்?

ஆனால், எல்லாம் எதினால் வந்தது? அழகில் மயங்கினதால் வந்த வினை. இன்றைக்கும், மனிதனுக்கு சரீர உபாதைகளையும், ஆத்தும உபாதைகளையும் ஏற்படுத்தும் கடுந்தீமைகள் அழகிய தோற்றத்துடன் தான் சமுதாய சந்தையில் வலம் வருகிறது. உதாரணமாக, மது வகைகளை தகர டப்பாக்களில் அடைத்து வைத்து, பிளாஸ்டிக் டம்ளர்களில் ஊற்றிக் கொடுத்தால், மிகக் குறைவானவர்களே அதை விரும்புவர். குடிக்கும் பழக்கத்திற்கு ஆளாவோரும் மிகமிகக் குறைவான எண்ணிக்கையிலேயே இருப்பர். ஆனால் இன்று

நிலைமை எப்படி? கண்ணைக் கவரும் மாடல்களிலான பாட்டில்களில் அடைக்கப்பட்டு, பளிச்சென்று வெளியில் தெரிகிறமாதிரியான கண்ணாடி கோப்பை மற்றும் கிண்ணங்களில் பரிமாறப்படுகிறது. அவைகளில் அது ததும்பும் போது, வேண்டாம் என்று நினைப்பவர்கள் உள்ளங்கள் கூடத் தடுமாறுகிறது. சரி, இன்று ஒரு நாள் இருக்கட்டும் என்று பொய்ச் சமாதானம் செய்து கொள்கிறது. ஞானி சாலமோன் இந்த அவல நிலை குறித்து எப்படிச் சொல்கிறார் என்று பாருங்கள். "**மதுபானம் இரத்தவருணமாயிருந்து, பாத்திரத்தில் பளபளப்பாய்த் தோன்றும்போது, நீ அதைப் பாராதே; அது மெதுவாய் இறங்கும். முடிவிலே அது பாம்பைப்போல் கடிக்கும்; விரியனைப் போல் தீண்டும், உன் கண்கள் பரஸ்திரீகளை நோக்கும், உன் உள்ளம் தாறுமாறானவைகளைப் பேசும்**". (நீதி 23:31-33).

மேற்சொல்லப்பட்ட தீமைகளுக்கு அடிப்படை என்னவென்று தெரிகிறதா? பாராதே என்று சொல்கிறான் ஞானி. ஆகவே, அடிப்படை **பார்த்தல்.** பார்க்கும் பொழுது, அதன் தோற்றம் அழகு இவை கவர்ந்திழுக்கிறது.

அடுத்து தாவீதின் வாழ்க்கையில் நடந்ததும் இதற்குச் சரியான எடுத்துக்காட்டாகும். சிறுவயது தொடங்கி, கர்த்தருக்குப் பயந்து நடந்த ஒரு வாழ்க்கையை அவன் நடத்தியிருந்தும், பாவம் இந்த தாவீதை, **'அழகு'** என்ற படுகுழியிலே குப்புறத் தள்ளியது. தான் ஆடுமேய்க்கும் இளைஞனாக இருந்த பொழுது, கர்ஜித்து வந்த கோலியாத்தைக் குறித்து இவ்விதமாகக் கூறியுள்ளான். "**ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை நிந்திக்கிறதற்கு விருத்த-சேதனமில்லாத இந்தப் பெலிஸ்தன் எம்மாத்திரம்**" (1 சாமு. 17:26) என்றான். தன்னுடைய தேவனைப் பற்றி இவ்வளவு பெருமிதம் கொண்டிருந்த தாவீது, அழகிலே மயங்கி பத்துக் கட்டளைகளில் மூன்று கட்டளைகளை பகிரங்கமாக மீறினான்.

பத்சேபாளை உப்பரிக்கையின் மேலிருந்து பார்த்து, அவளது அழகிலே மயங்கினான். அவளை அடைவதற்காக அவன் செய்த சில்லறைத்தனங்கள் மிகக் கேவலமானது "பிறர் பொருளை இச்சியாதிருப்பாயாக" "விபச்சாரம் செய்யாதிருப்பாயாக" "கொலை செய்யாதிருப்பாயாக" என்று மூன்று தேவ கட்டளைகளை கூசாமல் மீறினான். (1சாமு 11அதி).

பாவம் மனிதனை எப்படியெல்லாம் அலைக்கழிக்கிறது பார்த்தீர்களா? அழகின் பின்னால் போனால் மிஞ்சுவது அசிங்கமே. ஜாக்கிரதையாயிருந்து பாவத்தின் வஞ்சனையில் சிக்காமல் நம்மைக் காத்துக் கொள்வோம்.

**III. பாவம் விதைப்பதை அறுக்கத் தேவையில்லை என்று சொல்லி ஏமாற்றும் :**

மனிதன், இன்று இவ்வளவு தீவிரமாகப் பாவத்தில், கொஞ்சம் கூடப் பயமில்லாமல் ஈடுபடுகிறான் என்றால், அதற்குக் காரணம், அவைகளுக்குத் தண்டனை இல்லையென்ற அவனது ஆழமான நினைப்புத்தான்.

தண்டனைக்குப் பயப்படும் பயம் மனிதனுக்கு இயல்பாகவே உண்டு. அந்த இயல்பை மீறி அவன் நடந்து கொள்கிறான் என்றால், அதற்குக் காரணம் அவன், ஏமாற்றப்படுகிறான் என்பதே. அவனுக்கு முன்பாக வீசப்படும் கண்ணியில் அவன் மதியில்லாமல் சிக்கி விடுகிறான்.

அந்த வேலையை பாவம், மிகத் தந்திரமாகச் செய்கிறது. அப்படியே, ஒருவேளை தண்டனை கிடைத்தாலும், அது இப்பொழுது கிடைக்கும் இன்பத்திற்கு ஈடாகாது என்று சொல்லி நூதனமாக தன் காரியத்தைச் சாதிக்கிறது.

ஆனால், செய்த தவறுகளுக்கு தண்டனை உண்டு என்று வேதாகமம் மிகத் தெளிவாகக் கூறுகிறது. பழைய ஏற்பாட்டின் நாட்களில், யோசுவாவின் மரணத்திற்குப் பிறகு, கானானில் எஞ்சியிருக்கிற சில ராஜாக்களோடு போரிட வேண்டிய கட்டாயம் இஸ்ரவேலருக்கு இருந்தது. கர்த்தருடைய அனுமதியோடு அந்த யுத்தங்களை வெற்றிகரமாக அவர்கள் நடத்தினர். ஒருசமயம் அதோனிபேசேக் என்ற ராஜா தோல்வியுற்று இவர்களின் கைக்கு தப்பி ஓடிப் போகையில், அவனைப் பின் தொடர்ந்து பிடித்து, அவன் கைகால்களின் பெருவிரல்களைத் தறித்துப் போட்டார்கள் (நியாயா.1:6) அந்த நிலையில் அதோனிபேசேக் ராஜா எப்படிப் புலம்பியுள்ளான் என்று கொஞ்சம் கவனியுங்கள் உண்மை விளங்கும்.

**"அப்பொழுது அதோனிபேசேக்; எழுபது இராஜாக்கள், கைகால்களின் பெருவிரல்கள் தறிக்கப்பட்டவர்களாய், என் மேஜையின் மேல் விழுந்ததைப் பொறுக்கித்தின்றார்கள்; நான் எப்படிச் செய்தேனோ, அப்படியே தேவன் எனக்கும் செய்து சரிக்கட்டினார் என்றான்** (நியாய. 1:7).

நீதியுள்ள நம் தேவனிடமிருந்து யாரும் தப்பித்துக் கொள்ள முடியாது. இந்த உண்மை தெரியாமல் மனிதன் தேவனோடு, விளையாடிக் கொண்டுள்ளான்.

புதிய ஏற்பாட்டிலும் இது இன்னும் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. விசுவாசத்தில் தள்ளாடிக் கொண்டிருந்த கலாத்தியா பட்டணத்து மக்களுக்கு, பவுல் எச்சரிப்புக் கொடுத்து எழுதும் வசனத்தைப் பாருங்கள். **"மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார், மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன், ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான்** (கலா.6:7,8).

இதைவிடத் தெளிவாக, வேதம் வேறு எப்படிச் சொல்ல முடியும்? இவ்வளவு தெளிவாகச் சொல்லப்பட்டிருப்பது கூட விளங்காமல் அவன் பாவத்திலே ஈடுபடுகிறான் என்றால், மனிதன் எவ்வளவு கொடுமையாக வஞ்சிக்கப்படுகிறான் என்று பாருங்கள். பாவம் எவ்வளவு நச்சுத்தன்மை உடையதாக உள்ளது எனக் கவனியுங்கள். இந்தப் பாவத்திடம் எவ்வளவு கவனமாக இருக்க வேண்டியது

அவசியம் என சிந்தியுங்கள். பாவம் நம்மை முட்டாளாக்க இனி ஒருபோதும் நாம் அனுமதிக்க வேண்டாம்.

நாம் ஒவ்வொருவரும், பாவம் என்ன சொல்கிறதென்றும், எப்படித் தோற்றமளிக்கிறதென்றும் பாராமல், அதனுடைய உண்மைத் தன்மையையும், அதின் பயங்கரத்தையும், அதனால் ஏற்படும் விளைவுகளையும் காண்போம். பாவம் என்ன தான் பித்தலாட்டம் செய்து நம்மை வஞ்சிக்கப் பார்த்தாலும், நாம் மயங்கிவிடாமல், பாவத்தை அதன் நிஜத் தன்மையோடு பார்த்து, நம்மைவிட்டு விரட்டுவோம்.

பாவம் எவ்வளவு அசிங்கமானது என நாம் இப்போது பார்த்துள்ளபடியால், அதிலிருந்து நம்மைக் காத்துக் கொள்ள, மிகச் சிறந்த வழி ஒன்றுள்ளது. அதின்படி நாம் யாவரும் செய்வோம். **"தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்வோம்"** (பிர.12:13). ஏனெனில், அவருடைய கற்பனைகள் நீதியுள்ளவைகள் (சங். 119:72).

ஆகவே நீதியுள்ள அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு, பாவமில்லாத ஒரு வாழ்க்கை வாழ, பரலோகத்தின் தேவன் நம் ஒவ்வொருவருக்கும் இரக்கம் கட்டளையிடுவாராக!

EZS. **ராஜ நாயகம்**


# சமுத்திரம் நிரம்புமோ?

வெகு நாட்களுக்கு முன்னதாக சாலமோன் இப்படி எழுதுகிறார். "எல்லா நதிகளும் சமுத்திரத்திலே ஓடி விழுந்தும் சமுத்திரம் நிரம்பாது; தாங்கள் உற்பத்தியான இடத்திற்கே நதிகள் மறுபடியும் திரும்பும்" (பிர.1:7). பார்ப்பதற்கு மேலெழுந்தவாரியான ஒரு கருத்தாக இருந்தாலும், இதில் மிகுந்த உண்மை உள்ளது. உலகில், எப்பொழுதும் கரைபுரண்டு, வேகமாக ஓடும் பல நதிகள் உண்டு. அந்த நீரெல்லாம் எங்கே செல்கிறது? ஞானி, மீண்டும் இப்படிச் சொல்கிறார். "மேகங்கள் நிறைந்திருந்தால் மழையைப் பூமியின்மேல் பொழியும்". (பிர.11:3). ஆமோஸ் இன்னும் அழகாக விவரிக்கிறார். "அவர் சமுத்திரத்தின் தண்ணீர்களை வரவழைத்து, அவைகளைப் பூமியினுடைய விசாலத்தின்மேல் ஊற்றுகிறவர்; கர்த்தர் என்பது அவருடைய நாமம்". (ஆமோஸ்.9:6). இந்தத் தண்ணீர் சுழற்சி (Water cycle)யைப் பற்றிய தெளிவு மனிதனுக்கு 16-ம் நூற்றாண்டின் இறுதியில் அல்லது 17-ம் நூற்றாண்டின் துவக்கத்தில்தான் தெரிய வந்தது. ஆனால் இவை கண்டுபிடிப்பதற்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பாக, வேதாகமத்தை எழுதினவர்களுக்கு எப்படித் தெரிந்தது? ஏதோ குருட்டுவாக்கில் சொன்னார்களோ? நிச்சயம் இல்லை.

# உலக
# வீடியோ வேதாகமக் கல்லூரி

## மாணவர் சேர்க்கை அறிவிப்பு

வேதாகம முழுநேரப் பயிற்சிக்கு தங்களை அர்ப்பணிக்க வாஞ்சையுள்ள வாலிபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.



**காலம்** : 3 வருடம் (செமஸ்டர் முறை)
கல்வித் தகுதி : +2 தேர்ச்சி (அல்லது) பட்டப்படிப்பு (திருமணமாகாத ஆண்கள் மட்டும்)

**பட்டம்** : பி.பி.எஸ் (Bacheler of Biblical Studies)

**தனித்தன்மை** : இந்தியாவின் ஒரே வீடியோ வேதாகமக் கல்லூரி

**ஆசிரியர்கள்** : உலகெங்கிலும் பெயர் பெற்ற, தேவனுக்கென்று தங்களை அர்ப்பணித்த தேவதாசர்கள் (அமெரிக்கா)

**போதிக்கும் முறை** : வீடியோ மூலம் மொழி பெயர்ப்புடன் போதிக்கப்படுகிறது.

*தகுதியுள்ளவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படும்.*

மேலும் விபரங்கட்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

இயக்குநர்

**உலக வீடியோ வேதாகமக் கல்லூரி**

தாராபுரம் ரோடு,
காங்கயம் - 638 701.
இந்தியா
தொலைபேசி : (04257) 30030

# நீங்கள் கிறிஸ்துவின் சபையைக் குறித்து கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

இந்தியாவில் அநேகரிடத்தில் கிறிஸ்துவின் சபையைக் குறித்து வித்தியாசப்பட்ட அநேகரிடத்தில் பேசும்போது, அவர்கள் அதைக்குறித்து கேள்விப்படவே இல்லை என தெரியவந்தது. உங்களைப்பற்றி என்ன? ஒருவேளை நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். நீங்கள்கிறிஸ்துவின் சபையைக் குறித்து கேள்விப்பட்டிருக்கிறீர்களா? என்று உங்களை நான் கேட்கட்டும். இல்லையெனில், மற்றவர்களை கேட்டதுபோல உங்களையும் கேட்கிறேன் : ஏன் கேள்விப்படவில்லை? உங்களிடத்தில் ஒரு வேதாகமம் இல்லையா? வேதாகமத்தின் பக்கங்களில் எந்த சபையைக் குறித்து நீங்கள் வாசிக்கிறீர்கள் நீங்கள் மறுபடியும் வாசித்தால் வேதாகமத்தில் ஒரே சபையாகிய கிறிஸ்துவின் சபையைக் குறித்தே குறிப்பிட்டுள்ளதை வாசிப்பீர்கள். பிறகு இந்த சபையைக் குறித்து நீங்கள் ஏன் கேள்விப்படவில்லை? வருடக் கணக்கில் நீங்கள் வேதாகமத்தை வைத்திருக்கிறீர்களே. இந்த வட்டாரத்தில் நம்மைச் சுற்றிலுமிருக்கிற அநேகர் ஏதோ சபையின் அங்கத்தினராயிருக்கிறார்கள். ஆனால், கர்த்தருடைய சபையைக் குறித்து என்ன? உலகெங்கும் கிறிஸ்துவின் சபை உள்ளது. உலகின் எல்லா இடங்களிலும் அது இல்லை தான். ஆகிலும் வேதாகமத்தை மாத்திரம் பின்பற்றுகிற மக்கள் இடங்களிளெல்லாம் இது இருக்கிறது. இந்த சபை பிரிவுக்கூட்டமோ (நாமகரணமோ), ஒரு பிரிவோ, அல்லது மனிதனால் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்தாபனமோ அல்ல. அது கத்தோலிக்கமோ, புராட்டஸ்டண்டோ அல்லது யூத மார்க்கமோ அல்ல. பிறகு அது என்ன? நீங்கள் வேதாகமத்தில் வாசிக்கிற சபை மாத்திரமே, கர்த்தருக்குக் கீழ்படிந்து, அவரிடத்தில் விசுவாசமாய் இருப்பவர்களைக் கொண்டு அமைவு பெற்றது. கிறிஸ்துவே இந்த சபையின் ஸ்தாபகர், நீங்களே வாசித்துப் பாருங்கள். மத்தேயு 16:18-ல் கிறிஸ்து கூறும்போது, "இந்த கல்லின் (பாறையின்) மேல் என் சபையைக் கட்டுவேன்" என்றார்.

இதன் துவக்கம் எருசலேம் பட்டணத்தில் நிகழ்ந்தது. இது உண்மையென்பதைக் காண லூக்கா 24-யும் அப்போஸ்தலர் 2-யும் வாசிப்பீர்களேயானால், அது உண்மையென அறிவீர்கள. அது லண்டனிலோ, ஜெர்மனியிலோ, அமெரிக்க ஐக்கிய நாடுகளிலோ ஆரம்பிக்கப்படவில்லை.

இந்த சபை கி.பி. 33-ல் ஸ்தாபிக்கப்பட்டது. இதன்பொருள், சபைக்கு 2000 வருடம் ஆகிறது. மீண்டும் அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தை

வாசித்துப் பாருங்கள். இங்கு சபை எப்படி ஆரம்பிக்கப்பட்ட எனக் காணலாம். இதனடிப்படையில் இதன் துவக்க தேதி தீர்மானிக்கப்படுகிறது. கிறிஸ்துவே இதன் ஸ்தாபகர் ஆனதால், அது கிறிஸ்துவின் பெயரைத் தரித்துக் கொள்கிறது "கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள் (ரோமர் 16:16), என்று சபையாகக் கூறப்படுவது உண்மை. "சீஷர்கள் முதன் முதலில் அந்தியோகியாவில் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டார்கள்" (அப்போஸ்தலர் 11:26) என்று இதன் அங்கத்தினர்கள் அழைக்கப்படுவதும் உண்மை. வேதாகமம் மட்டும், கிறிஸ்தவர்களை மாத்திரம் உண்டாக்குகிறது. இதை மனதில் வையுங்கள்.

கிறிஸ்து ஒரே ஒரு சபையை மாத்திரமே ஸ்தாபித்தார். எபேசியர் 4:4-ல் அது ஒரே சரீரம் என்றழைக்கப்படுகிறது. கொலேசேயர் 1:18-ல் சபை சரீரம் என்றழைக்கப்படுகிறது. எனவே ஒரே சபை மட்டுமே அவருக்கு உண்டு.

கிறிஸ்து சபைக்கு தலையாயிருக்கிறார். "புருஷன் மனைவிக்கு தலையாயிருப்பது போல, சபைக்கு தலையாயிருக்கிறார். அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார். (எபேசியர் 5:23). கர்த்தரின் சபைக்கு பூமிக்குரிய தலைவரோ, தலைமையகமோ இல்லை. கிறிஸ்துவே தலையாயிருக்கிறார், அவர் பரலோகத்தில் தேவனுடைய வலது பாரிசத்தில் இருக்கிறார்.

கிறிஸ்து சபைக்கு இரட்சகராயிருக்கிறார். இதுவும் எபேசியர் 5:23-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் பொருள் ஒருவர் இரட்சிக்கப்பட்டால், அவர் சபையின் அங்கமாயிருக்கிறார்.

கிறிஸ்து சபைக்காக மரித்தார் (எபேசியர் 5:25; அப்போஸ்தலர் 20:28) அந்த அளவிற்கு கிறிஸ்து அதற்கு முக்கியத்துவம் கொடுத்தார். எனவே இது உங்களுக்கு எந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாயிருக்கிறது?

இரட்சிக்கப்பட்டவர்கள் அதில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர் (அப்போஸ்தலர் 2:47). கிறிஸ்து இரட்சிக்கப்பட்டவர்களை தமது சபையில் சேர்க்கிறார்.

அவர் மீண்டும் தமது சபைக்காகவே வருகிறார். (எபேசியர் 5:27). அவர் மறுபடியும் வரும்போது, அந்த சபையில் நீங்கள் அங்கமாயிராவிட்டால் என்னவாகும்? இதைக் குறித்து சிந்தியுங்கள்.

கர்த்தருடைய சபை ஏற்கனவே இந்த வட்டாரத்திலே, இந்த பட்டணத்தில், இந்த சமுதாயத்தில் உள்ளது. நீங்கள் கர்த்தரை நேசித்து, அவருடைய வசனங்களை வாசிக்கவும் அதைக் கைக்கொள்ளவும் கூடிய அளவுக்கு நீங்கள் ஒப்புக் கொடுத்தால் நீங்களும் இந்த சபையில்

அங்கமாக இருக்கலாம். இப்படிச் செய்வதன் மூலம், தேவனுடைய வசனத்தையும் அதன் ஆசானையும், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவையும் நீங்கள் விசுவாசித்து, (எபிரேயர் 11:6; யோவான் 14:13; ரோமர் 10:17), உங்களின் எல்லா பாவங்களிலிருந்தும் மனந்திரும்பி, (லூக்கா 13:3; அப்போஸ்தலர் 17:30; 2:38), கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு, (ரோமர் 10:10; மத்தேயு 10:32), பிறகு உங்கள் பாவ மன்னிப்பிற்கென்று, ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, (தண்ணீரில் அடக்கம் பண்ணப்பட்டு அல்லது முழுக்கி ஞானஸ்நானம் பெற்று), (அப்போஸ்தலர் 2:38, மாற்கு 16:16 ரோமர் 6:3,4; கலாத்தியர் 3:26,27,1 பேதுரு 3:21), இரட்சிக்கப்படுவீர்கள், இதன் விளைவாக கர்த்தர் உங்களை தமது சபையில் சேர்த்துக் கொள்வார் (அப்போஸ்தலர் 2:47), அப்பொழுது நீங்கள் கிறிஸ்தவர் என்று மாத்திரமே (எந்த ஒரு சபையையும் சேர்த்து அடைமொழியுடன் கூடிய 'கிறிஸ்தவர்' என்றல்லாமல்) அழைக்கப்படுவீர்கள் (1பேதுரு 4:16). இது நீங்கள் வசிக்கும் உங்கள் பகுதியில் கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினராக மாற்றும், ஜனங்கள் கர்த்தரை நேசித்து, அவருக்கு கீழ்ப்படிந்து, அவருக்கு உண்மையாய் ஜீவிக்கும் வரை இப்படியே தொடரும். எப்படியிருப்பினும், மேற்குறிப்பிட்டபடி செய்யும்போது, அது ஒருபோதும் வேறொரு பிரிவுகூட்ட அங்கத்தினனாக உங்களை மாற்றாது, அல்லது உங்கள் மூலம் ஒரு புதிய நாமகரணக்கூட்டம் உருவாவதில்லை, ஏனெனில் கர்த்தருடைய சபை நாமகரணக்கூட்டமல்ல.

தற்சமயம் இந்த சபையைக் குறித்து அறிய வேண்டுமானால், உங்கள் வேதாகமத்தை கவனமுடன் வாசியுங்கள். மேலும் விவரங்களுக்கு எங்களைத் தொடர்பு கொண்டு, இலவச அஞ்சல் வழி பயிற்சியைத் தொடருங்கள்.

"சபையிலே கிறிஸ்து இயேசு மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதா காலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்". (எபேசியர் 3:21).

**J.C. CHOATE** **J.C. சோட்**


# தொலைபேசி எண் மாற்றம்

## CHANGE IN TELEPHONE NUMBER

☎ பழைய எண் : ~~20030~~ புதிய எண் : 30030

**OLD NO : ~~20030~~ NEW NO : 30030**

# நம்முடைய பிள்ளைகளுக்கு ஆராதிப்பதற்குப் பயிற்சி கொடுக்க வேண்டும்

"போதனை என்கிற வார்த்தை நமது மனதிற்கு வாய்மொழி விளக்கம், விரிவுரை, காரணம் ஆராய்தல் என்ற அர்த்தங்களை கொண்டு வரும். "பயிற்சி" என்கிற பதம் இத்துடன், ஒரு காரியத்தை முழுமையாக கற்றுக் கொள்ளும் வரை அதை செய்து பழக வேண்டிய தேவை-யையும் நமக்குக் காட்டுகிறது.

நமது பிள்ளைகளை நாம் பயபக்தி மற்றும் ஆவிக்குரிய வளர்ச்சியின் அனுபவமான ஆராதனை செய்வதற்கு பயிற்சி அளிக்கும் பாக்கியம் உடைய-வர்களாக இருக்கிறோம். நாம் நம்முடைய வேலையை சரிவர செய்வோமானால், அவர்களுடைய சுதந்திரம் தேவனோடு வாழ்க்கை முழுமையும் இனிமையாக இருக்கும். சாரம் அற்ற முறையில் பயிற்சி அளிப்போமானால் அவர்களுடைய மிகப்பெரிய பொக்கிஷத்தை நாம் திருடுகிறோம் என்பதாகும்.

சில தடுப்பு ஊசிகளைப் போடுவதன் மூலம், ஒரு குறிப்பிட்ட வியாதியிலிருந்து நாம் காக்கப்படுகிறோம் ஒருவேளை தடுப்பு ஊசிகள், தன் தன்மையை இழந்ததாக பயன் அற்றதாகவும் இருக்குமானால் அவை சரீரத்தில் சிறு விளைவுகளையோ, தோல் அரிப்பையோ அல்லது காய்ச்ச-லையோ உண்டு பண்ணும். ஆனாலும் சரியான தடுப்பு ஊசிகளோடே நம்முடைய மனதும் அதற்கு சீராக ஒத்துழைக்கும் பட்சத்தில் அது நமது வாழ்வு முழுவதும் அவ்வியாதியிலிருந்து விலக்கி, அதற்-குரிய எதிர்ப்பு சக்தியைத் தருகிறது.

கவனமில்லாமையினாலே, நம்முடைய பிள்ளைகளுக்கு நாம் ஆவிக்குரிய வாழ்வில், தன்மை இழந்த தடுப்பூசிகளை கொடுக்க முடியும், ஆவிக்குரிய வாழ்க்கையை உருவாக்க முடியாத வெறுமையான கிறிஸ்தவத்திற்கு இவர்களை பழக்கப்படுத்துவதினாலே இப்படி ஆகும். ஒருவேளை நாம் அவர்களை ஆராதனைக்கு அழைத்துச் செல்லக்கூடும்; வேதத்தை அவர்-களுக்கென்று நாம் வாசிக்கக்கூடும்; மாதிரி ஜெபத்தை அவர்களுக்கு நாம் சொல்லித்தரமுடியும். அதன் விளைவாக, கிறிஸ்தவத்தை உண்மையில் தாங்கள் முயற்சித்துவிட்டதாகவும் அது அவர்களது வாழ்க்கைக்கு ஒத்துவராது என்ற எண்ணம் அவர்களுக்கு வரும். ஆகவே தான் அவர்கள் தெய்வ பயமில்-லாதவர்களாக மாறிவிடுகிறார்கள். இப்பொழுதோ, உண்மையான வாஞ்சை-யில்லாமல், வாசிக்க வேண்டுமென்பதற்-காகவே வாசித்தும், அவர்களுக்கு சொல்லித்தரப்பட்ட மாதிரி ஜெபங்களை ஏனோ, தானோ என்று தேவனிடத்தில் ஒன்றும் இருதயத்திலிருந்து சொல்லு-வதற்கில்லை என்று நினைத்துச் சொல்லியும், ஆராதனையின் போது தூங்கியும், விளையாடியும் இருப்பதால், அவர்களுடைய மனதில் தேவனுடைய பிரசன்னத்திற்கு இப்படி முறையற்ற ஆராதனையின் வழியாக செல்வதற்கு விருப்பமில்லாமல் போகிறது.

**நம்முடைய பிள்ளைகள் முழு மனதுடனே ஆராதிக்கும்படியாக அவர்களுக்குப் பயிற்சி அளிப்பது எப்படி?**

1. முதலாவது, அவர்கள் உண்மையாக புரிந்துகொள்வதற்கு இன்னும் சிறிய-வர்களாக இருக்கும்போதே, வார நாட்களில், கர்த்தருடைய நாளில் வரப்போகும் ஆராதனையைக் குறித்து

பேசும்போது, நம்முடைய முகபாவனைகளும், குரலும் தேவனை தொழுது கொள்ளுவதில் நமக்கு இருக்கும் சந்தோஷத்தை பிரதிபலிக்க வேண்டும்.

2. இரண்டாவது நம்முடைய குடும்ப ஜெபத்திலும்கூட மரியாதையுடனும், பயபக்தியுடனும் நடந்து கொள்வதைக் குறித்து பயிற்சி தர வேண்டும்.

3. நாம் நம்முடைய முன் உதாரணத்தின்படியாகவும், வாய்மொழியில் விளக்கம் அளிப்பதன் மூலமாகவும் ஆராதனைக்கு நாம் ஆயத்தமாகிறோம் என்பதை போதிக்க வேண்டும். நம்முடைய மனதையும், சரீரத்தையும் சுத்தமாக்கி, தேவனுக்கு கனத்தை சேர்க்கும்படியான உடைகளை அணிய வேண்டும். நாம் முறையாக சரீரப்பிரகாரமாய் ஆயத்தமானோம் என்றால், ஆராதனைக்குத் தேவையாக ஆவிக்குரிய ஆயத்தம் செய்வது எளிதாயிருக்கும்.

4. ஆராதனையிலும், நம்முடைய சொந்த நடக்கையால் நாம் அவர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும். நாம் முழுமனதுடனே பாடும்போதும், நாம் பயபக்தியாக கேட்கும் போதும், நாம் விசுவாசத்துடன், கர்த்தருடைய வேலையை தாங்கும்படி உதாரத்துவமாய் கொடுக்கும்போதும். மற்றும் இவைகளை நம்முடைய தினசரி வாழ்வில் ஒரு பகுதி என்பதால் இவை பற்றி நம்முடைய வார நாட்களில் பேசி, திட்டமிட்டு செய்தால் அவைகள் நமது பிள்ளைகளுடைய ஆராதனையிலும், வாழ்விலும், ஒரு பகுதியாகவே மாறும்.

5. ஆராதனையில் நம்முடைய பிள்ளைகள் பாட வேண்டும் என்று ஆசை கொண்டோம் என்றால், தங்கள் சுயமுயற்சியில் பாடுவதற்கு வெகு நாட்களுக்கு முன்னமே அவர்களுக்கு பாடல் புத்தகத்தைக் கொடுத்து, பக்கம் கண்டுபிடிக்க உதவி செய்து, வார்த்தைகளை கவனிப்பதில் வழி நடத்த வேண்டும்.

6.சிறுவயது முதற்கொண்டே பிள்ளைகளுக்கு என்று தனியாக வேதாகமம் இருக்க வேண்டும். அதை அவர்கள் மிகப் பத்திரமாகவும், மரியாதையுடனும், அன்புடனும், பாதுகாக்கவும், தவறாமல் ஆராதனைக்கு அதை எடுத்துச் செல்லவும் கற்றுத்தர வேண்டும்.

7. ஆராதனையின் போது பிள்ளைகள் என்ன செய்கிறார்கள் என்பதில் பெற்றோர் கவனமாக இருக்க வேண்டும். எட்டு மற்றும் பத்து வயது நிரம்பிய பிள்ளைகள் கர்த்தரை நினைக்கும் பந்தியின் போது பேசுவதையும், விளையாடுவதையும் நான் பார்த்தது உண்டு. பாடுவதற்கு பதிலாக விளையாடுவதை நான் கண்டதுண்டு. ஜெபத்தின் மூலமாகவும், பிரசங்கத்தின் மூலமாகவும் பாடங்களை கற்றுக் கொள்வதற்கு கவனமாக இருப்பதை விடுத்து தூங்குவதை நான் கவனித்தது உண்டு.

குழந்தைகளும், வயது வந்தவர்களைப் போலத்தான் மீண்டும் மீண்டும் ஒரு காரியத்தை பார்ப்பதின் மூலமாக நாம் பல காரியங்களை கற்றுக் கொண்டு அதில் பழக்கமடைகிறதைப் போலவே, பயிற்சி பெறுகிறார்கள். சிறு வயதிலேயே, நமது பிள்ளைகள் ஆராதனை விஷயத்தில் முழுமையான அர்த்தத்துடன் புரிந்து கொண்டு, வளரமுடியும் ஆனால், இப்படி வளர்வதற்கு ஆராதனைக்கு அவர்களைப் பழக்கப்படுத்தும் ஆரம்ப நாட்களை அவர்கள் தூக்கத்திலும், விளையாட்டிலும், தகுதியான வயது வரும்வரை வீட்டில் பொழுதுபோக்குவதிலும் செலவழித்திருக்கக் கூடாது. நம்முடைய பிள்ளைகளை பொறுப்புள்ள, ஆராதிக்கிற பெரியவர்களாக வளர்ப்பதற்கு சரியான பயிற்சி அளிப்பது நம்மேல் விழுந்த கடமை.

**B.B. CHOATE** **பெட்டி சோட்**

# விலக்காது காத்துக் கொள்வோம்

**எ**கிப்து தேசம் எங்கும் இருள்! மூன்று நாள் காரிருள் ஏகோபித்திருந்ததால் கண்கள் இருந்தும் எகிப்தியன் ஒருவனை ஒருவன் காணவில்லை. உட்கார்ந்த இடத்தில் உண்டு, உறங்கி, உலோகம் போல ஒட்டிக்கொண்டு உலகறியாமல் மூன்று நாள் தடவிக் கொண்டு தவித்தார்கள். இஸ்ரவேலரோ வெளிச்சத்தில் வெண்பஞ்சைப்போலக் காணப்பட்டார்கள்! காலம் மாறியது! ஆபிப் மாதம் இஸ்ரவேலருக்கு முதல்மாதம் ஆயிற்று! விடுதலை வேட்கை தணிக்கப்பட்டு, திக்குவாயும், மந்த நாவும், உடையவன் என்ற மோசே இஸ்ரவேலர்களை திடமனதாக தெய்வத்திருவாக்கை துணையாகக் கொண்டு வழிநடத்தினான். அவனுக்குப் பின்பு யோசுவாவைக் கொண்டு வழி நடத்தப்பட்ட இஸ்ரவேலர்கள் யோர்தானைக் கடந்த நிகழ்விலிருந்து "அன்பு" "ஜெபம்" "தியானம்" "பயபக்தி" "போதனை" "இரக்கம்" "மாதிரி" "இச்சை-யடக்கம்" என்னும் கற்களை நாம் கண்டு களித்தோம்.

தேவனுக்கென்று ஆலயமொன்று கட்டவேண்டுமென்று அளப்பறியா ஆசையும், ஆவலும் கொண்ட அரசன் சாலொமோன், அவ்வாலயத்தைக் கட்டி முடித்த போது, கர்த்தர் கொற்றவனுக்கு தரிசனமாகி விளம்புவதைக் கவனியுங்கள், "என் சமூகத்தில் **மன உத்தமும்** செம்மையாய் உன் தகப்பனாகிய தாவிது நடந்தது போல நடப்பாயானால்..." (1 இராஜா 9:14) சாலொமோனிடம் சர்வவல்லவர் எதிர்பார்க்கிறதைக் கண்டீர்களா ஆ! ஆலயம் கட்டிவிட்டாய் நீ நிச்சயம் பரலோகத்திற்கு பாத்திரவான் என்று அவர் சொல்லாமல், **மன உத்தமத்தை** உடையவனாயிரு என்று எச்சரிக்கிற வாலிபர்களாகிய நாம் "உத்தமம்" எனும் கல்லை சுமந்து சுகமாயிருக்க வேண்டும் என்பதற்காக இக்கல்லை வடிக்கிறேன் கண்டு களித்திடுக.

## உத்தமம் என்னும் கல்

"உத்தமம்", இச்சொல்லுக்கு **சரியானது** அல்லது **நேர்மையானது** என்ற பொருளை நாம் கொடுக்க முடியும். ஒரு மனிதனை "உத்தமன்" என்று அழைக்கும் போது, அதற்கு பாவமில்லாதவன் என்ற பொருளைத் தராமல், தேவனுடைய நியாயத்தீர்ப்பில் குற்றமற்றவனாக எண்ணப்படுவான் என்ற அர்த்தத்தைத் தருகிறது. அதாவது பாவம் மன்னிக்கப்படுவதற்கு தேவன் எதை எதிர்பார்க்கிறாரோ அதைச் செய்தவன் என்ற பொருளைத் தரும் ஆதி 6:9ல் நோவா : யோபு 1:1ல் யோபு ஆகிய மனிதர்களுக்கு இவ்வார்த்தை, சிறப்பிக்கும் சொற்களாக, உரிச்சொல்லாக பயன்படுத்-

தப்படுகிறது. புதிய ஏற்பாட்டு சபையிலே மூப்பர்களிடம் இக்குணம் எதிர்பார்க்கப்படுகிறது. (I தீமோ 3:2)

வாலிபர்களாகிய உங்கள் முன், ஒரு வேதாகமப் பாத்திரத்தை பக்குவமாய் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். ஒரு நேர கூழுக்காக சேஸ்டபுத்திர பாகத்தை விற்றுபோட்டவன், (ஆதி. 25:30-33) ஒரு திராட்சை தோட்டத்தை அடைய முத்திரை மோதிரத்தை கழற்றிக் கொடுத்தவன், (II இராஜா 21:8) அழகு என்னும் அநித்தியத்தை அடைய தன்னை மொட்டை அடிக்க அனுமதித்தவன் (நியா.16:19) , இவர்களின் மத்தியில் இவர் வாயிலிருந்து உதிர்க்கும் வார்த்தைகளை கவனியுங்கள். **"என் ஆவி பிரியுமட்டும் என் உத்தமத்தை என்னை விட்டு விலக்கேன்"** (யோபு 27:5) என்ன ஒரு உறுதியான நிலை பாருங்கள். யோபு என்னும் இம்மாமனிதன் நம் யோசனைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு வானளாவிய சிகரம் போல் சிங்காரமாய் நிமிர்ந்தெழுந்து நிற்பதை நீங்களும் கண்டு உதிரம் உரைந்து போயிருப்பீர்கள் என நம்புகிறேன்.

வாலிபர்களே! இவன் இப்படி முடிவெடுத்திருப்பது எல்லாம் இனியவைகளாய், தித்திக்கும் தேன் சுவை போல வாழ்க்கை நகர்ந்து கொண்டு போகையில் அல்ல. பொருட்ச் செல்வங்களும் பிள்ளைச் செல்வங்களும் சொல்லாமலேயே தன்னை விட்டுச் சென்று விட்டது, உடலும் உருக்குலைந்த நேரமிது, அதுமட்டுமா இதைக் கவனியுங்கள் "அவன் மனைவி அவனைப் பார்த்து நீர் இன்னும் **உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ!** தேவனை தூஷித்து ஜீவனை விடும் என்றாள்". உறைவிட்டெழுந்த வாளை நேராக நெஞ்சில் ஓங்கி குத்துவது போல் உலகில் உயர்ந்த உறவுகளில் ஒன்று என போற்றப்படும் துணைவி துணிகரமாக பேசிய நேரமிது, அத்தோடு நின்றதா என்றால் இவன் இருக்கும் துயரத்தின் உச்சியை அடைய ஏணிப்படிகள் இன்னும் இருக்கின்றன. தொடர்ந்து படித்திடுக.

ஆறுதலை அள்ளித்தர வேண்டும் என்ற அரியதொரு அகம்கொண்டு தங்கள் இடம்விட்டு இவனைத் தேடிவந்திருப்பான் தேமானியனாகிய எலிப்பாஸ் என்றும், சொத்துக்களை இழந்து சோர்ந்து போன உள்ளத்தை சேர்ந்து நாம் தேற்றிடல் வேண்டும் என வந்திருப்பான் சோப்பார் என்றும், காலம் சுழன்று சூழ்நிலைகள் கீழ்நிலைக்குத் தள்ளப்பட்டதை தாங்க முடியாமல், தன் நிலைவிடுத்து இவனிடம் வந்திருப்பான், சூகியனான பில்தாத் என்றும், யோபுவின் உள்ளம் ரணகளமாக இருக்கிறதை அறிந்து காயங்களுக்கு தம்முடைய ஆறுதலான வார்த்தைகளை எண்ணெயாகப் பூசி ஆற்றிட வேண்டுமென எண்ணி, வந்திருப்பான் பூசியனாகிய எலிகூ என்றும் நினைத்தால், சிநேகிதரைப் போலவா பேசினார்கள்! குற்றம்

புரிந்தாய்; குணப்படு, தீமை உண்டு, தீவிரம் காட்டு, முதியோர் மொழி மறந்தாய்; மண்ணில் மண்டியிட்டு இருக்கிறாய். திருந்திடு என இடித்தும் இகழ்ந்தும், துணிந்தும், தூற்றியும், அல்லவா பேசினார்கள்! இதன் மத்தியில் தான் இவன் "என் ஆவி பிரியுமட்டும் உத்தமத்தை விலக்கேன்" என்கிறான், நினைத்தாவது பார்க்க முடிகிறதா இவன் உத்தமத்தின் உறுதியை

புதிய ஏற்பாட்டு நூலில் யாக்கோபு என்பவர், ஒருவன் எப்பொழுது உத்தமனாக விளங்குவான் என்பதைப் பற்றி யாத்துக் கொடுக்கையில், "சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; **அவன் உத்தமனென்று விளங்கின பின்பு**.... ஜீவகிரீடத்தைப் பெறுவான்" (யாக் 1:12) என்கிறார். ஒருவன் உத்தமனாக விளங்குவதற்கு உபத்திரவம் அல்லது சோதனை என்கிற உரைகல் அவசியமாக இருக்கிறது என்று ஆவியானவர் திருவுளம் பற்றுகிறார். வாலிபர்களே உபத்திரவம் என்றவுடன் வாழ்க்கையில் நாம் சந்திக்கும் ஒவ்வொரு துயரமும் கிறிஸ்துவுக்காக நாம் படும் உபத்திரவங்கள் என நினைக்கலாகாது. நாம் நம்முடைய சுய இச்சையினாலே சிலவேளைகள் சோதிக்கப்படுவதுண்டு (யாக் 1:14).

கிறிஸ்துவுக்காக, நாம் சந்திக்கும் ஒவ்வொரு சோதனையும் "உத்தமம்" என்கிற கல்லை பட்டை தீட்டி, மேலும் மெருகு ஏற்றுகிறது என்பதை உணர வேண்டும். உங்கள் உத்தமத்தில் உறுதியாக நிற்க நீங்கள் முற்படும் போது, **"உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு அவர் கேடகமாயிருக்கிறார்"** (நீதி 2:7) என்பதை அறிந்து "உத்தமமாய் நடக்கிறவன் பத்திரமாய் நடக்கிறான்" (நீதி 10:9) என்பதை உணர்ந்து, தேவன் உத்தமனுக்கு துணையாக இருக்கிறதினால் அவன் பத்திரமாக, பாதுகாப்பாக நடக்க ஏதுவாக இருக்கிறது என்பதை ஏற்றுக் கொள்வது அவசியம்.

இஸ்ரவேல் ஜனங்கள் மோசேயின் தலைமையில் எகிப்தை விட்டு வெளியே வந்தபோதும், அவர்களின் எண்ணமெல்லாம் எகிப்திலிருந்து, அங்கே அவர்களுக்கு இனாமாகக் கிடைத்த காரியங்களில் தங்கள் மனதைச் செலுத்தி தங்கள் வாயினால் கூறுவதைக் கவனியுங்கள். " நாங்கள் பட்டயத்தால் மடியும் படிக்கும், எங்கள் பெண்ஜாதிகளும் பிள்ளைகளும் கொள்ளையாகும்படிக்கும், கர்த்தர் எங்களை இந்த தேசத்துக் கொண்டு வந்தது என்ன? **எகிப்துக்குத் திரும்பிப் போகிறதே எங்களுக்கு உத்தமம் அல்லவோ என்றார்கள்**" (எண் 14:3) கர்த்தர் இரவும், பகலும், தங்களுக்கு துணையாக இருக்கிறார் என்பதை மறந்தே போன இவர்களைப் போல இராமல், எல்லாம் எதிராக அமைந்திருந்த போதிலும் **உத்தமத்தை விலக்கேன் என்ற யோபுவைப் போல** நாமும் ஆவி பிரியும் மட்டும் உத்தமம் என்னும் கல்லை உறுதியாக சுமந்திடுவோம். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்!!

**ஜே. பிக்கின்ஸ்.**

# நீதிமொழிகள் ஒரு கண்ணோட்டம்

காலம் : **ஏறக்குறைய கி.மு. 930-960**

ஆசிரியர் : **சாலொமோன் (1:1,10:1, 25:1) ஞானி (22:17-24:24 23-34) ஆகூர் (30:1) லேமுவேல் (31:1).**

## இந்நூல் பற்றி

1. ஞானத்தையும், போதகத்தையும், இந்நூலை தியானிக்கிறவர்கள் அடைய வேண்டும் என்பதை நோக்கமாக கொண்டிருக்கிறது.
2. "கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்" என்று தெய்வீக ஞானத்தின் உறைவிடத்தை தெளிவாக எடுத்துரைக்கிறது.
3. இந்நூலை எழுதிய லேமுவேல் (31:1) என்ற ஒரு அரசன் இஸ்ரவேலில் இருந்ததில்லை என்பதால் இது சாலொமோனையே குறிக்கும் என்று கருதப்படுகிறது.
4. இந்நூலை வாசித்து தியானிக்கிற ஒருவன் புத்தி மதிகளை உணர்ந்து, விவேகம், நீதி, நியாயம், நிதானம் என்பவைகளைப் பற்றிய உபதேசத்தை அடையலாம்.
5. இந்நூலின் எபிரேய தலைப்பு "சாலொமோனின் மிஸ்லி" இதற்கு "சாலமோனின் நீதிமொழிகள்" என்று பொருள். "நீதிமொழிகள்" என்கிற பதத்திற்கு எபிரேயத்தில் "மாஸ்ஷல்" (MASHAL) என்பதாகும். அதற்கு "சமமான அர்த்தமுடைய" அல்லது "உவமை" என்று பொருள்படும்.
6. இந்த நூலில் சொல்லப்பட்ட எல்லாவற்றையும் சொல் அர்த்த ரீதியிலே எடுத்துக் கொள்ள முடியாது. (15:9:21:22:23:2)
7. இந்த நூலில் சொல்லப்பட்ட எல்லாம், எல்லா நேரங்களிலும் உண்மையாக இருப்பதில்லை (29:12, 15:25, 15:19, 22:6)

## இந்நூலின் செய்தி

1. சரியான பாதையை நாம் தெரிந்து எடுப்பது மிக முக்கியமானது, நமது நியாயத்தை தீர்ப்பது தேவனே என்பது நாம் உணர வேண்டும் (29:26)
2. மூடன் என்கிற வார்த்தை 26 முறையும், ஞானி என்கிற வார்த்தை 97 முறையும் இந்நூலினால் இடம் பெற்றிருக்கிறது.

# இயேசு லாசருவை மரணத்திலிருந்து எழுப்பினார்

அன்புள்ள சிறு தம்பி! தங்கைகளே, நமது ஆத்தும நேசர் இவ்வுலகில் இருந்தபோது நம்மைப் போன்ற சிறு பிள்ளைகளை நேசித்தததைப் போலவே, லாசரு என்ற மனிதனையும் சிநேகித்தார். இம்மாதம் இயேசு அவனுக்குச் செய்த மிகப் பெரிய அற்புதத்தை என்னோடு சேர்ந்து கவனியுங்கள்.



இயேசு இப்பூமியிலிருந்தபோது ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் பயணம் செய்து, பிரசங்கிக்கவும், ஜனங்களுக்கு நன்மை செய்து கொண்டிருந்தபடியால், தன்னுடைய உணவுக்கும், உறைவிடத்துக்கும், ஜனங்களின் தயவை அவர் சார்ந்திருக்க வேண்டியிருந்தது. அப்படி அவர் அடிக்கடி தங்கி, இளைப்பாறின ஒரு கிராமம்தான் பெத்தானியா. மார்த்தாள், மரியாள், லாசரு போன்றவர்கள் இக்கிராமத்தைச் சேர்ந்தவர்கள். "மார்த்தாள் அவரைத் தன் வீட்டிலே, ஏற்றுக் கொண்டதாக வசனம் கூறுகிறது" (லூக்.10:38-39).

பெத்தானியா என்பது, எருசலேமிலிருந்து எரிகோ செல்லும் வழியில், எருசலேமுக்குக் கிழக்கே, இரண்டு மைல் தொலைவில் ஒலிவ மலைக்கு அருகில் இருந்த ஒரு சிறிய கிராமம். இன்றைக்கும் இது ஒரு சிறிய, ஏழ்மை நிறைந்த கிராமமாக உள்ளது. இதைச் சுற்றிலும், ஒலிவ மரங்களும், அத்தி மரங்களும், மாதுளை மரங்களும் வளர்ந்துள்ளன.

லாசரு, மிகுந்த வியாதிப்பட்டதினாலே, அவனுடைய சகோதரிகள் இயேசுவினிடம் ஆட்களை அனுப்பினார்கள். ஆனால், இயேசு உடனடியாக பெத்தானியாவுக்குச் செல்லவில்லை. மார்த்தாள், மரியாள், லாசரு ஆகியோரை இயேசு அதிகம் நேசித்தார். ஆனாலும், பெத்தானியாவிற்குப் புறப்படுவதற்கு முன்பாக, மேலும் இரண்டு நாட்கள் இருந்த இடத்திலேயே தங்கினார். தன்னுடைய சீடர்களிடம் லாசரு "நித்திரையாயிருக்கிறான்" என்று சொன்னார். ஆனால், அவர்களால் அதை சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆகையால், அவர்களிடம், "லாசரு மரித்துப் போனான்" என்று வெளிப்படையாகவே சொல்லிவிட்டார்.

இயேசு, பெத்தானியாவுக்கு வந்தபோது, லாசரு மரித்து நான்கு நாட்கள் ஆகிவிட்டது. அப்பொழுதும், மார்த்தாள், மரியாள் ஆகியோரை ஆறுதல் படுத்தும்படியாய் அவர்கள் வீட்டில் அநேகர் இருந்தனர். இயேசு அங்கே வந்து சேர்ந்தபோது, லாசருவின் சகோத-

ரிகள் இருவரும் அவரிடம், "நீர் இங்கே இருந்தீரானால் தங்கள் சகோதரன் பிரிந்திருக்கமாட்டான்" என்று சொன்னார்கள். இயேசுவில், அவர்கள் அதிக நம்பிக்கை வைத்திருந்தனர். மார்த்தாள், "இப்பொழுது நீர் தேவனிடத்தில் கேட்டுக் கொள்ளுவதெதுவோ அதைத் தேவன் உனக்குத் தந்தருளுவார்" என்றாள். அவர்களுடைய நண்பர்கள் அனைவரும் அழுதனர். இயேசுவால் மாத்திரமே அந்தச் சூழ்நிலையில் அவர்களுக்கு உதவி செய்ய முடியும்.,

லாசருவின் சகோதரிகளும், அவர்களுடைய நண்பர்களும் எவ்வளவு பாதிப்படைந்திருக்கிறார்களென்பதை இயேசு கண்டு மிகுந்த துக்கப்பட்டார். அவரை கல்லறைக்கு அழைத்துச் சென்றபோது, தன்னால் நேசிக்கப்பட்டவர்களின் துயரத்தையும், வேதனையும் பகிர்ந்து கொண்டு தானும் அழுதார். லாசரு புதைக்கப்பட்டிருந்த கல்லறையின் வாயிலில் ஒரு பெரிய கல் புரட்டி வைக்கப்பட்டிருந்தது. இயேசு, "கல்லை எடுத்துப் போடுங்கள்" என்றார். அப்பொழுது, மார்த்தாள், அது நல்ல யோசனை என்று நினைக்கவில்லை. கல் எடுத்துப் போடப்பட்டபிறகு, தன்னுடைய பரலோக தகப்பனை நோக்கி ஜெபித்தார். அங்கே கூடியிருந்த அநேகருக்கும், மார்த்தாள், மரியாள் போன்றவர்களுக்கும், இந்த அற்புதத்தின் மூலமாக தான் யார் என்பது நிரூபிக்கப்படவேண்டுமென்று விரும்பினார். அத்தோடு யோவான் புத்தகத்தில் இடம்பெற்றுள்ள இந்த ஏழாம் அற்புதத்தின் மூலம், தேவன் மகிமைப்படவேண்டுமென்பதும் முக்கியமானது.

ஜெபித்ததற்குப் பிறகு, "லாசருவே, வெளியே வா" என்று உரத்தசத்தமாய்க் கூப்பிட்டார். அவனுடைய கைகளும், கால்களும் பிரேதச் சீலைகளால், கட்டப்பட்டிருந்த அந்த நிலையிலேயே அவன் வெளியே வந்தான். இயேசு அவர்களை நோக்கி, "இவனைக் கட்டவிழ்த்து விடுங்கள்" என்றார். இந்த அற்புதத்தின் மூலம், இயேசு தேவனுடைய குமாரன் என்று அநேகர் விசுவாசித்ததோடு தேவனைத் துதித்து அவருடைய நாமத்தை மகிமைப்படுத்தினார்கள்.

இன்றைக்கும் தேவன், மரித்தோரிலிருந்து யாரையும் உயிரோடு எழுப்புவதில்லை. ஆனால், இதுபோன்ற அநேக மகத்தான அற்புதங்களை அவருடைய வேத வசனங்களில் வாசிக்கிறோம். யோவான் சொல்வது போல "இந்தப் புஸ்தகத்திலே எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே, நித்தய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது" (யோவான்.20:30,31).

வேதாகமத்தில் இடம்பெற்றுள்ள எல்லா அற்புதங்களையும் படிப்பதன் மூலம் இயேசுவைப் பற்றி, சிறு பிள்ளைகளாகிய நாம் அதிகமாய்த் தெரிந்து கொள்ளலாம். அதன் மூலம் நம்மைப்படைத்து, வழி நடத்துகிற நம்முடைய பரலோகத் தந்தையை மகிமைப்படுத்துவோம்.

தமிழில் : **ஏபில் ரோஜர் நாயகம்**

# வெளிப்படுத்தின விசேஷம்

(அதிகாரம் 18 : 1-24)

**வெ**ளிப்படுத்தல் 17-ம் அதிகாரமானது, "பூமியின் ராஜாக்கள் மேல் ராஜ்யபாரம்பண்ணுகிற மகா நகரமாகிய" (17:18) உருவக ரீதியிலான பாபிலோன் மீது, வரப்போகும் நியாயத்தீர்ப்பு குறித்து அறிவிக்கிறது. (17:1-5). இந்த பாபிலோனுக்கான நியாத்தீர்ப்பானது 18-ம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. முதல் வசனத்தில், யோவான், "வேறொரு தூதன் மிகுந்த அதிகாரமுடையவனாய், வானத்திலிருந்து இறங்கி வரக் கண்டேன், அவனுடைய மகிமையினால் பூமி பிரகாசமாயிற்று" என்று கண்டான். (18:1). பதினெட்டாம் அதிகாரத்தில், பாபிலோன் நியாயத்தீர்ப்பு சம்பந்தமான பகுதிகள், ஏசாயா, எரேமியா ஆகிய புத்தகங்களிலிருந்து திரும்பத்திரும்ப மேற்கோள் காட்டப்பட்டுள்ளது அல்லது குறிப்பிடப்பட்டுள்ளது. பாபிலோனின் அழிவு இங்கே உருவக ரீதியில் பயன்படுத்தப்பட்டுள்ளது. வெளிப்படுத்தல் நூலில், தேவன் கிறிஸ்தவர்களுக்கு போதிக்கும் பாடங்களை நாம் புரிந்து கொள்வதற்கு உதவியாயிருக்கும்படி இந்த வசனப் பகுதிகளை நாம் ஒப்பிட்டுப் பார்க்க உள்ளோம்.

வசனம் 2-ல், தூதன், "பலத்த சத்தமிட்டு : மகா பாபிலோன் விழுந்தது! விழுந்தது! அது பேய்களுடைய குடியிருப்பும், சகலவித அசுத்த ஆவிகளுடைய காவல் வீடும், அசுத்தமும் அருவருப்புமுள்ள சகலவித பறவைகளுடைய கூடுமாயிற்று" என்றது (8:2). இந்தத் தூதனுடைய சத்தமானது (வெளி. 14:8லும் நாம் பார்த்தோம்) ஏசாயா 21:9-ஐ எதிரொலிக்கிறது. ("இதோ, ஒரு ஜோடு குதிரை பூண்ட இரதத்தின் மேல் ஏறியிருக்கிற ஒரு மனுஷன் வருகிறான்; பாபிலோன் விழுந்தது; அதின் விக்கிரக தேவர்களையெல்லாம் தரையோடே மோதி உடைத்தார் என்று பிரதியுத்தரம் சொல்லுகிறான்"). எரேமியா 51:8-ம், "பாபிலோன் சடிதியில் விழுந்து தகர்த்தது; அதற்காக அலறுங்கள்; அதின் நோவை ஆற்றப் பிசின் தைலம் போடுங்கள்; ஒருவேளை குணமாகும்" என்று சொல்லுகிறது. ஏசாயா, எரேமியா, ஆகிய இருவரும் பாபிலோன் விழும்போது, அது காட்டுமிருகங்களும், பறவைகளும் சஞ்சரிக்கும் ஸ்தலமாகுமென்று முன்னுரைத்துள்ளனர். (ஏசா.13:21-22; எரே. 50:39). பண்டைய பாபிலோனின் முழுமையான அழிவு. ஆவிக்குரிய பாபிலோனுக்கு என்ன ஆகும் என்பதற்கு முன்னடையாளமாயிருக்கிறது.

பண்டைய பாபிலோன், "பாபிலோன் கர்த்தருடைய கையிலுள்ள பொற்பாத்திரம்; அது பூமி அனைத்தையும் வெறிக்கப்பண்ணினது; அதின் மதுவை ஜாதிகள்குடித்தார்கள்; ஆகையால் ஜாதிகள் புத்திமயங்கிப்-போனார்கள்." (எரேமியா, 51:7) பாத்திரமாயிருந்தது. வெளி. 18:3, பாபிலோன் அழிவுக்காக அதே போன்றதொரு காரியத்தை அடையா-ளப்படுத்துகிறது. "அவளுடைய வேசித்தனத்தின் உக்கிரமான மதுவை எல்லா ஜாதிகளும் குடித்தார்கள்; பூமியின் ராஜாக்கள் அவளோடே வேசித்தனம் பண்ணினார்கள்; பூமியின் வர்த்தகர் அவளுடைய செல்வச் செருக்கின் மிகுதியினால் ஐசுவரியவான்களானார்கள் என்று விளம்பினான்" (18:3). வெளி. 14;8 17:1-5ஐயும் பார்க்கவும். மார்க்க ரீதியிலான தவறுகளுக்கும், ஒழுக்க கேடுகளுக்கும், அநீத பொருளாசைக்கும் இருப்பிடமாக இருந்தது. உலகத்தின் ஆவிக்குரிய நிலை 1. யோவான்.5;19-ல் தொகுத்து கொடுக்கப்பட்டுள்ளது. அது, "உலகம் முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது" என்று கூறுகிறது. வேத வசனங்களில் நாம் வாசிக்கிற அதே பொல்லாங்-குத்தனத்தை இன்றைக்கு நம்முடைய உலகத்தில் பார்க்கிறோம். பாபிலோனைப் பற்றிய துல்லியமான அடையாளத்தை நாம் காண்பது அவசியமில்லையென்பதற்கு இது ஒரு காரணம். இது ரோமைப் போலவே இருக்க முடியும். அது அப்படியாயிருக்கிறதோ அல்லது இல்லையோ, ஆனால் வெளிப்படுத்தல் 18-ம் அதிகாரத்தில் போதிக்கப்பட்டிருக்கும் அடிப்படைப் பாடங்கள் அதேவிதமாக நமக்கு இன்றைக்குப் பொருந்துகிறதாக இருக்கிறது.

பதினெட்டாம் அதிகாரத்தில் வலியுறுத்தப்பட்ட மிக முக்கியமாக பாடங்களில் ஒன்று வசனங்கள் 4,5-ல் உள்ளது. "பின்பு, வேறொரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன். அது : என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு அவளுக்கு நேரிடும் உபாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளை விட்டு வெளியே வாருங்கள். அவளுடைய பாவம் வானபரியந்தம் எட்டியது, அவளுடைய அநியாயங்களைத் தேவன் நினைவு கூர்ந்தார்" (18:4,5). இது, எரேமியா புத்தகத்தில், சரீரப்பிரகாரமான இஸ்ரவேலுக்கு, தேவன் சொன்ன அதே காரியம். அங்கே, தேவன் தன்னுடைய ஜனங்களுக்கு இவ்விதம் கட்டளைகொடுத்துள்ளார். "பாபிலோன் நடுவிலிருந்தோடி, கல்தேயரின் தேசத்தைவிட்டுப் புறப்பட்டு, மந்தையின் முன் நடக்கும் கடாக்களைப் போல் இருங்கள்" (எரேமியா.50:8). "நீங்கள் பாபிலோனின் அக்கிரமத்தில் சங்காரமாகாதபடிக்கு அதின் நடவிலிருந்து ஓடி, அவரவர் தங்கள்

ஆத்துமாவைத் தப்புவியுங்கள்; இது கர்த்தர் அதினிடத்தில் பழிவாங்குகிற காலமாயிருக்கிறது; அவர் அதற்கு பதில் செலுத்துவார்". (எரே. 51:6). அங்கே இஸ்ரவேலர்கள், "பாபிலோனை குணமாக்கும்படிப் பார்த்தோம், அது குணமாகவில்லை; அதை விட்டுவிடுங்கள்; நாம் அவரவர் நம்முடைய தேசங்களுக்குப் போகக் கடவோம்; அதின் ஆக்கினை வானமட்டும் ஏறி ஆகாயமண்டலங்கள் பரியந்தம் எட்டினது (எரே.51:9). (51:45ஐயும் பார்க்கவும்).

சோதோம் கொமோராவின் பாவம் வானத்துக்கு எட்டி (ஆதி.18:20-21) அதன் விளைவாக அது அழிக்கப்பட்டது (ஆதி. 19:24,25) போல பாபிலோனும் அதன் துன்மார்க்கத்தினிமித்தம் தேவனால் அழிக்கப்பட்டது. துன்மார்க்கர்மீது தேவன், நித்திய ஆக்கினியைக் கொண்டுவருவார் என்று எல்லா மனிதர்களையும் எச்சரிப்பவையாக இவை உள்ளது. (2 பேதுரு-2:6 யூதா:7). பாபிலோனிலிருந்து இஸ்ரவேலர்களுக்குத் தேவன், எரே.51:50-ல் "பட்டயத்துக்கு தப்பினவர்களே, தங்கித்தரியாமல் நடந்து வாருங்கள் தூரத்திலே கர்த்தரை நினையுங்கள்; எருசலேம் உங்கள் ஞாபகத்தில் வரக்கடவது" என்றார். இதேவிதமான செய்தியை நாம் வெளிப்படுத்தல் நூலிலும் பெற்றுக்கொள்கிறோம். இங்கே வேறுபாடு என்னவெனில், நாம் ஆவிக்குரிய இஸ்ரவேலாக இருக்கிறோம். அது, கிறிஸ்துவின் சபையாகும் (கலா.6:16 1.பேதுரு.2:5-9). இங்கே, "பாபிலோனை" விட்டு, வெளியே வா என்பது நம்மை சரீரப்பிரகாரமாக உலகத்திலிருந்து வெளியேற்றிக்கொள்வதென்ற பொருள் ஆகாது. (1.கொரி.5:9-10). மாறாக, இந்த உலகத்தின் துன்மார்க்கமும், வீணுமான கிரியைகளிலிருந்து நம்மை பிரித்துக்கொள்ளவேண்டுமென்பதே அதன் பொருள். (யோவா.15:19 கலா 1:4, 6:14, தீத்து.2:11-12, யாக்.1:27, 4:4,1 பேதுரு.2:9, 2.பேதுரு.1:4). "ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லு-கிறார். அப்பொழுது, நான் உங்களை ஏற்றுக் கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்" (2.கொரி 6:17-18) என்று தேவன் நமக்குக் கட்டளை கொடுத்திருக்கிறார்.

நாம் உலகத்திலிருப்பவர்களாக இருந்தாலும், உலகத்தார்களாக இருக்கக்கூடாது. (யோவான்.17:14-16). சரீரப்பிரகாரமான இஸ்ரவேல், துன்மார்க்கமான பாபிலோனை விட்டு வெளியே வாருங்கள் என்று

சொல்லப்பட்டதுபோல, இன்றைக்கு நாம் உலகத்தின் பொல்லாங்குகளிலிருந்து தப்பி, "கர்த்தரை நினைத்து", "எருசலேம் நம்முடைய சிந்தைக்குள் வரும்படி" அனுமதிக்க வேண்டும். சபையானது, பரலோக எருசலேம் என்று அழைக்கப்பட்டுள்ளது. (எபி.12:22-23), கர்த்தரும், அவருடைய சபையும் நம்முடைய சிந்தையை ஆட்கொள்ள வேண்டும்.

பாபிலோனை விட்டு வெளியே வாருங்கள் என்று தேவனுடைய பிள்ளைகளுக்குக் கொடுக்கப்பட்ட உற்சாகமுள்ள வார்த்தைகளோடு (18:4,5) வெளி. 18:6 பாபிலோன் மீது, தேவனுடைய இரட்டிப்பான கோபாக்கினை பற்றியும் கூறுகிறது. "அவள் உங்களுக்குப் பலனளித்ததுபோல நீங்களும் அவளுக்குப் பலனியுங்கள்; அவன் உங்களுக்குக் கலந்து கொடுத்த பாத்திரத்திலே இரட்டிப்பாக அவளுக்குக் கலந்து கொடுங்கள்". அவளுடைய கிரியைகளுக்குத் தக்க தண்டனை கொடுக்கப்படும் என்று பண்டைய பாபிலோனுக்கு தேவன் கொடுத்திருந்தார் (எரே.50:15 15;6,24,35,49). குறிப்பாக, தேவனுக்கு எதிராகப் பெருமை கொள்வதற்குப் பூமியின் உல்லாசங்களில் வாழ்வதற்கும் அப்படியாகும் என்று சொல்லியிருந்தார் (எரே.50:29).

ஏசாயா 47;7-8 வசனங்கள், பாபிலோனை இவ்விதம் கடிந்து கொண்டது. "என்றென்றைக்கும் நாயகியாயிருப்பேனென்று சொல்லி, இந்தக் காரியங்களை இதுவரைக்கும் உன் மனதிலே வையாமலும், அதின் முடிவை நினையாமலும் போனாய். இப்பொழுதும் சுகசெல்வியே, விசாரமில்லாமல் வாழ்கிறவனே, நான் தான், என்னைத் தவிர ஒருவருமில்லை; நான் விதவையாவதில்லை, நான் சந்தான சேதத்தை அறிவதில்லையென்று உன் இருதயத்திலே சொல்லுகிறவளே, நான் சொல்லுகிறதைக் கேள்" (ஏசாயா.47:7.8). வெளி. 18;7-ன்படி இரண்டாம் "பாபிலோன்" எல்லா வகையிலும் முதலாவதைப் போன்றதே. ("அவள் தன்னை மகிமைப்படுத்தி, செல்வச் செருக்காய் வாழ்ந்ததெவ்வளவோ அவ்வளவாய் வாதையும் துக்கத்தையும் அவளுக்குக் கொடுங்கள். நான் ராஜஸ்திரீயாய் வீற்றிருக்கிறேன்; நான் கைம்பெண்ணல்ல, நான் துக்கத்தைக் காண்பதில்லையென்று அவள்தன் இருதயத்திலே எண்ணினாள்" (வெளி.18:7). தன்னுடைய பெருமையினிமித்தமும், மாம்ச உல்லாசங்களைத் தேடினதினிமித்தமாகவும் உலகமானது ஆக்கினைக்குள்ளாக்கப்பட்டிருக்கிறது. வெளி. 18:8-ல், "சாவு, துக்கம், பஞ்சம்" போன்ற பாதைகளை பாபிலோன் மீது ஒருநாளில் கொண்டு வந்து, அதன் பெருமை மற்றும் துன்மார்க்கத்தினிமித்தம் அக்கினியால் சுட்டெரிக்கப்படுவாள் என்ற தேவன் வாக்களித்துள்ளார். வசனம் 8, "அவளுக்கு நியாயத் தீர்ப்புக்

கொடுக்கும் தேவனாகிய கர்த்தர் வல்லமையுள்ளவர்" எனக் கூறி, இதன் நிச்சயத்தை கோடிட்டுக் காட்டுகிறது.

வெளி.18:9-19, இந்த பாபிலோன் விழும்போது நடக்கும் துக்கத்தை விவரிக்கிறது. துன்மார்க்கத்தனத்தில் அவளுக்குப் பங்காளிகளாக இருந்த பூமியின் ராஜாக்கள், அவளுக்காக அழுது புலம்புவார்கள். (18:9). ஆனால், அவர்கள் "அவளுக்குண்டான வாதையினிமித்தம் பயந்து, தூரத்திலே நின்று அப்படிச் செய்வார்கள் (18:10). பாபிலோன், பூமியின் வர்த்தகர்களுடைய செல்வத்தின் இருப்பிடமாக இருந்தபடியால், அதினிமித்தம் அவர்களும் அழுது புலம்புவார்கள்.(18:11). வசனங்கள், 12,13 ஆகியவைகளில் விவரிக்கப்பட்டிருக்கும் பாபிலோனின் செல்வங்கள், பொதுவாக பாவமற்றவை என்பது கவனிக்கத்தக்கது. விலையுயர்ந்த உலோகங்கள், கற்கள், சகலவித வஸ்துக்கள், துர் வாசனைப் பொருட்கள், உணவுப் பொருட்கள், மிருகங்கள் போன்றவை தீமையானவைகளோ, தீமையை தருபவைகளோ அல்ல. நம்முடைய சமுதாயத்தில், அடிமைத்தனமும், மனுஷருடைய ஆத்துமாக்களைக் கொல்வதும் சட்டத்திற்கு புறம்பானதென்பது மகிழ்ச்சிக்குரிய (18;13) ஆனால் வாழ்க்கைக்கு மிகவும் அத்தியாவசியமானவைகளைக் கொண்டுள்ள இந்தப் பொருள்களினால் பிரச்சினை என்ன? தங்களுடைய செல்வத்தை தேவனுக்குப் பிரியமாக செலவழிக்க வேண்டுமென்று, செல்வந்தர்களுக்கு தேவன் கட்டளைகொடுக்கிறபடியால், பணமே பாவமாகி விடாது. "இவ்வுலகத்திலே ஐஸ்சுவரியமுள்ளவர்கள் இறுமாப்பான சிந்தையுள்ளவர்களாயிராமலும், நிலையற்ற ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கை வையாமலும், நாம் அனுபவிக்கிறதற்குச் சகலவித நன்மைகளையும் நமக்குச் சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன் மேல் நம்பிக்கை வைக்கவும், நன்மை செய்யவும், நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும், தாராளமாய்க் கொடுக்கிறவர்களும், உதார குணமுள்ளவர்களுமாயிருக்கவும், நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ளும்படி வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும் அவர்களுக்குக் கட்டளையிடு". (1.தீமோ.6:19,20) இயற்கையிலே செல்வம் பாவமானால், இக்காரியம் அல்லது கட்டளை நிறைவேற்ற முடியாததாகிவிடுமே.

1தீமோ.6:10 சொல்கிறது. பண **ஆசையே** எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறதென்று, அதுபோலவே, லூக்.8:14-ல் உள்ள விதைக்கிறவன் உவமையில், சில கிறிஸ்தவர்கள் உலக கவலைகளினாலும், ஐசுவரியத்தினாலும், சிற்றின்பங்களினாலும் இவ்வுலகத்தில் நெருக்கப்படுவார்கள் என்று

இயேசு சொல்லுகிறார். லூக். 8 : 14-ல் உள்ள "கவலை" என்ற வார்த்தை, அதே பொருளுடன் மத். 6 : 31-ல் இடம் பெற்றுள்ளது. அங்கே அவர், என்னத்தை உண்போம், என்னத்தை குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள் என்று கூறுகிறார். இப்பகுதியில் (மத். 6 : 24), நாம் தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியம் செய்ய முடியாது என்று கூறுகிறார். இங்கே உலகப் பொருளாக உணவு, நீர் ஆகாரம் ஆகியவை சொல்லப்பட்டிருக்கிறது. அஞ்ஞானிகள் இவைகளை நாடித் தேடுகிறார்கள். நாமோ, முதலாவது தேவனுடைய ராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடவேண்டுமென்று சொல்லுகிறார். உணவு, தண்ணீர், உடை ஆகியவை வாழ்க்கைக்கு அவசியமானவை ஆனால், வாழ்க்கைக்கு அத்தியாவசியமான இவைகளைப் பற்றிய "கவலைகள்" கூட ஒரு கிறிஸ்தவனை நெருக்கிப்போடும். ஏதாவது ஒரு உலகப் பொருளை நாம் நேசித்தால், நாம் தேவனை நேசிக்க முடியாது. (லூக்.16:13, யாக்.4:14 1.யோவான்:2:15). நாம் புசிப்பதும், குடிப்பதும், உறங்குவதும் பெலனைப் பெற்றுக் கொள்ளும்படியாக (பிர.10:17) அப்பெலனை, அவனுடைய ராஜ்யத்தையும், நீதியையும் தேடுவதற்கு நாம் பயன்படுத்த வேண்டும் (மத்.6;33). நம்முடைய சொந்த உல்லாசங்களுக்கல்ல, எல்லாக் காரியங்களையும் கர்த்தர் நிமித்தமாகச் செய்ய வேண்டும்.

உலகப் பொருளை நேசித்துத் தேடுவதின், தவிர்க்க முடியாத, அதே சமயம் துக்ககரமான முடிவு வெளி. 18;14-ல் விவரிக்கப்பட்டுள்ளது. "உன் ஆத்துமா இச்சித்த பழவர்க்கங்கள் உன்னை விட்டு நீங்கிப்போயின; கொழுமையானவைகளை, சம்பிரமானவைகளும் உன்னை விட்டு நீங்கிப் போயின; நீ அவைகளை இனிக் காண்பதில்லை". இந்த ஜனங்களின் ஆத்துமாக்கள் இச்சித்தது ஒருபோதும் இராதபடி முடிந்துபோயிற்று. இதேவிதமான காரியம் பண்டைய பாபிலோனுக்கு நிகழ்ந்தது. (எரே.50;37, 51:13 இது, நித்தியத்திற்கு ஆயத்தப்படும்படியாய், ஒரு முக்கியமான அடிப்படைப் பயத்தை நமக்குப் போதிக்கிறது. இந்த உலகத்திலுள்ள யாவும் ஒழிந்துபோம். (1. யோவா. நமக்குப் போதிக்கிறது. இந்த உலகத்திலுள்ள யாவும் ஒழிந்து போம். (1.யோவா.2;17). உலகப் பொருள்கள் அனைத்தும் அநித்தியமானது (லூக்.12:15-21, 2.கொரி4:18). ஆகவே, நாம் இந்த உலகத்தையோ அதன் பொருள்களையோ நேசிக்கக் கூடாது. (1.யோவான்.2:15,16, லூக்.16;13). அநித்தியமான இவ்வுலக காரியங்களைப் பார்க்கக் கூடாது. (1.கொரி.4;18;கெலோ.3:2 இந்த பூமியிலே பொக்கிஷங்களை நமக்கு சேர்த்து வைக்கவுங் கூடாது. (மத்.6:19-24). இவைகளை நாம் நேசிக்கிறவர்களாக இருந்தால், ஒரு நாளில் நாம் எல்லாவற்றையும் இழந்து,

நித்திய காலமாக அவைகளை இனி ஒருபோதும் காணமாட்டோம். இப்படிப்பட்ட உலகப் பொருளுக்கு நாம் விலகி ஓடி, காணாதவைகளைப் பின்பற்றி, நித்திய காரியங்களாகிய நீதி, தேவ பக்தி, விசுவாசம், அன்பு, பொறுமை, சாந்தம் இவைகளில் நிலை கொண்டிருந்து, தேவனிடத்தில் ஐசுவரியமுள்ளவர்களாயிருக்க வேண்டும். (1.தீமோ.6 : 6-11). நித்தியத்திற்கு ஆயத்தப்படும்படியாய், இவ்வுலகத்தின் அனைத்தையும் விட்டுவிட தீர்மானித்து (லூக். 14:33), நித்தியமான காரியங்களை மாத்திரம் நாம் நேசித்துத் தேடுகிறவர்களாயிருக்க வேண்டும். தேவனையும், உலகத்தையும் ஒருசேர நேசிக்க முடியாது. அநித்தியமான காரியங்களுக்குப் பதிலாக அல்லது மேலாக நாம் நித்தியமான காரியங்களைத் தெரிந்தெடுக்க வேண்டும். வசனங்கள் 9-10-ல் சொல்லப்பட்டுள்ள பூமியின் ராஜாக்களைப் போல, பாபிலோனாலே ஐசுவரியவான்களாக்கப்பட்ட வர்த்தகர்களும் அவளுக்குண்டான வாதையினால் பயந்து ஐசுவரியவான்களாக்கப்பட்ட தூரத்திலே நின்று (18:15), பட்டணத்துக்கும் அதன் ஐசுவரியத்துக்கும் நேர்ந்த அழிவைக் கண்டு துக்கித்தார்கள். (வெளி.18:16-17). மாலுமிகள் யாவரும், கப்பல்களில் யாத்திரை பண்ணுகிறவர்கள் யாவரும், கப்பலாட்களும், சமுத்திரத்திலே தொழில் செய்கிற யாவரும் தூரத்திலே நின்று அழுதார்கள்.(வெளி.18;17,18). அவர்கள், "தங்கள் தலைகள் மேல் புழுதியைப் போட்டுக் கொண்டு : ஐயையோ மகா நகரமே! சமுத்திரத்திலே கப்பல்களையுடைய அனைவருக்கும் இவளுடைய உச்சிதமான சம்பூரணத்தினால் ஐசுவரியவான்களானார்களே! ஒரு நாழிகையிலே இவள் பாழாய்போனாளே! என்று அழுது துக்கத்திற்கும் துயரத்திற்கும் உள்ளாக்கின இச்சம்பவம் எதிர்மறையான விளைவை பரலோகத்தில் உண்டாக்கியது. (வெளி.18:20, "பரலோகமே! பரிசுத்தவான்களாகிய அப்போஸ்தலர்களே! அவளைக் குறித்துக் களிகூறுங்கள். உங்கள் நிமித்தம் தேவன் அவளை நியாயந்தீர்த்தாரே! என்று தூதன் சொன்னான்" என்று சொல்கிறது. இந்த மகிழ்ச்சி, ஜனங்கள் தங்கள் ஆத்துமாக்களை இழந்துபோனதால் ஏற்பட்டதல்ல (எசே.33;11, யோனா,4 யோவா.3:16 ரோம, 5:6-11). மாறாக, தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பே இம்மகிழ்ச்சிக்குக் காரணம்.

வசனம் 21-ல், அப்பொழுது, பலமுள்ள தூதனொருவன் பெரிய ஏந்திரக்கல்லையொத்த ஒரு கல்லை எடுத்துச் சமுத்திரத்திலே எறிந்து, இப்படியே பாபிலோன் மகா நகரம் வேகமாய்த் தள்ளுண்டு, இனி ஒருபோதும் காணப்படாமற்போகும்" என்று காண்கிறோம். சுரமண்டலக்கரரும், கீதவாத்தியக்காரரும், நாகசுரக்காரரும், எக்காளக்காரருமானவர்களுடைய சத்தம் இனி உன்னிடத்தில் கேட்கப்படுவதுமில்லை. எந்தத் தொழிலாளியும் இனி உன்னிடத்தில் காணப்படுவதில்லை. ஏந்திர

சத்தம் இனி உன்னிடத்தில் கேட்கப்படுவதுமில்லை (18;22). விளக்கு வெளிச்சம் இனி உன்னிடத்தில் பிரகாசிப்பதுமில்லை, மணவாளனும், மணவாட்டியுமானவர்களுடைய சத்தம் இனி உன்னிடத்தில் கேட்கப்படுவதுமில்லை (18:23). இந்த பாபிலோன் மீதான தேவனுடைய நியாயத்தீர்ப்பின் உறுதி, பண்டைய பாபிலோனுக்கு நிகழ்ந்ததை மீண்டும் சொல்கிறது. (ஏசா.13:15-22, எரே.50;3, 12-45, 51:25-47, 62-64 பார்க்கவும்). ஆனால், பாபிலோனுக்கு எதிரான தேவனுடைய பயங்கரமான நியாயத்தீர்ப்புக்குக் காரணம் என்ன? இதற்கு, இரண்டு பிரதான காரணங்கள் வெளி.18:23,24-ல் கொடுக்கப்பட்டுள்ளது. பூமியனைத்தும் மோசம் போவதற்கு பாபிலோன் காரணமாக இருந்தது. வசனம் 23, "உன் வர்த்தகர் பூமியில் பெரியோர்களாயிருந்தார்களே; உன் சூனியத்தால் எல்லா ஜாதிகளும் மோசம் போனார்களே" என்று சொல்கிறது. இரண்டாவதாக, இந்தப் பாபிலோன் தேவனுடைய ராஜ்யங்களை துன்புறுத்தியது. வசனம் 24, தீர்க்கதரிசிகளுடைய இரத்தமும், பரிசுத்தவான்களுடைய இரத்தமும் பூமியில் கொல்லப்பட்ட அனைவருடைய இரத்தமும் அவளிடத்தில் காணப்பட்டது" என்று சொல்கிறது. தன்னுடைய ஜனங்களுக்கு செய்தவைகளினிமித்தமும் பூமியில் கொல்லப்பட்ட அனைவருடைய இரத்தமும் அவளிடத்தில் காணப்பட்டது" என்று சொல்கிறது. தன்னுடைய ஜனங்களுக்கு செய்தவைகளினிமித்தமாக, தேவன் முதலாவது, பாபிலோனை அழித்தார்.(எரே.50:7, 17-18, 51:24, 35,49). உருவக ரீதியிலான இந்த பாபிலோன், அப்போஸ்தலர்கள் தீர்க்கதரிசிகள், பரிசுத்தவான்கள் உட்பட, இயேசுவினுடைய இரத்தச் சாட்சிகளின் இரத்தத்தைச் சிந்தினார்கள் (வெளி.17:5,14, 18;20,24).

தேனுடைய ஜனங்களுக்குச் செய்த பொல்லாப்பினிமித்தமாக பண்டைய பாபிலோன் முழுமையாகவும், நிரந்தரமாகவும் அழிக்கப்பட்டதுபோல, இந்த உருவக பாபிலோனும் அதே விதமாக வீழ்ச்சியடையும். இந்த வார்த்தைகள், இவைகளை முதலாவது வாசித்தவர்களுக்கும், முதல் நூற்றாண்டின் இறுதியில் ஈவு இரக்கமற்ற துன்புறுத்தலுக்கு ஆளாகியிருந்த கிறிஸ்தவர்களுக்கும் மிகுந்த ஆறுதலையும், நம்பிக்கையையும் கொடுத்திருக்கும். இது, ரோம சாம்ராஜ்யத்திற்கு நேரிடையாக பொருந்தக்கூடியதாக இருந்தாலும், இந்த பதினெட்டாம் அதிகாரம் ஒரு காரியத்தை மிகத் தெளிவாகச் சொல்கிறது. அதாவது, உலகத்தை நேசிப்பவர்களும், அநியாயத்தில் சந்தோஷப்படுகிறவர்களும், கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்துகிற அனைவரும், ஒருநாளில் தேவனுடைய நித்திய கோபாக்கினையில் பங்கு பெற்றே ஆகவேண்டும் என்பதே அது.

JON MACON

EZSR

# திருமறையில் காணும் மாதிரிப்படியே உதவிக்காரர்கள் சபையில் பந்தி விசாரணை செய்கின்றனர்

**பு**திய ஏற்பாட்டுச் சபையில் உதவிக்காரர்கள் ஊழியத் திட்டத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றனர். அவர்களின் பொறுப்புக்களை முறையாக புரிந்து கொள்ளுதல் சபை வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாததாகும், திருமறையில் உதவிக்காரர்களைக் குறித்து மிகவும் குறைவாகவே குறிப்பிடப்பட்டிருந்தாலும் உதவிக்காரர்களின் அதிகாரம், அவர்களின் தகுதியம்சங்கள், அவர்களை தேர்ந்தெடுக்கும் முறை, அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட கடமைகள், அந்த கடமைகளை அவர்கள் நிறைவேற்றும் முறை ஆகிய அனைத்திற்கும் போதிய விளக்கமும், அடிப்படை வழிகாட்டலையும் திருமறைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அவைகளை முறையாக கையாள்வதன் மூலம், மூப்பர்களுக்குச் சமமாக அவர்களை மூப்பர்களாகிய கண்காணிகளுக்கு சம்மாக்குதல் அல்லது பெயரளவில் உதவிக்காரர்களை நியமித்துவிட்டு, மிகவும் குறைவான செயல்பாடுகளை கொண்டிருத்தல் ஆகிய இரு வரைமுறை மீறலையும் தவிர்க்கலாம்.

### இப்பதத்தின் பொருள்

மூலப் பொருளில் "உதவிக்காரர்" எனும் பதம் "ஊழியன்" என்றே பொருள் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது "ஒருவர் இடும் கட்டளைகளை மற்றவர் நிறைவேற்றுதல்" என விளக்கமளிக்கப்படுகிறது, "வேலைக்காரன், பணியாளர், ஊழியன்" என்றெல்லாம் பெயர் சொல் மற்றும் வினைச் சொல்லின் கலப்படமாக 70 முறைக்கு மேல் கூறப்பட்டுள்ளது. இருப்பினும் ஆங்கிலத்தில் "உதவிக்காரன்" எனும் பதம் 5முறை மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. (பிலி 1:1) (1தீமோ 3:8,10,12,13) பிற இடங்களில் இப்பதம் ஊழியன் வேலைக்காரன், ஊழியம் செய்தல், ஊழியம் செய்ய, விசாரிப்பு, விசாரிப்புக்கென, தரும பணி, நிர்வாகம் பண்ணுதல், நிர்வாகம் செய்வோர், சேவித்தல் போன்ற வார்த்தைகளிலும் பிற இடங்களில் கூறப்பட்டுள்ள இப்பதம் பயன்படுத்தப்பட்ட ஒவ்வொரு இடத்திலும், "ஊழியம்" என்று பொருளையே கொண்டுள்ளது.

### உதவிக்காரர்களின் அதிகாரம்

சபையிலே தேவன் உதவிக்காரர்களுக்கு அளித்திருக்கும் அதிகாரங்கள் வெளிப்படையானவை, "உதவிக்காரர்களின் பதவி" குறிப்பாக அடையாளப்படுத்தப்படுகிறது (1தீமோ 3:10,13) எப்படிப்பட்ட நபர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்பதற்கான தகுதியாம்சங்கள்

சபைக்கு கற்பிக்கப்பட்டுள்ளன (அப் 6:3 1 தீமோ 3:8-10) ஆதிசபை இவ்வகைப் பணிகளைச் செய்யும்படி மனுஷர்களை தேர்ந்தெடுத்து நியமிக்க பன்னிரண்டு அப்போஸ்தலர்களால் கட்டளை பெற்றது (அப் 6:23) மேலும் பவுல் பிலிப்பி பட்டணத்து சபைக்கு தமது நிருபத்தை எழுதியபோது, அங்கு பணியாற்றிய சில நபர்களுக்கும் வாழ்த்துக்கள் சொல்லப்படுகிறது (பிலி 1:1)

அவர்களின் தகுதியாம்சங்கள், உதவிக்காரர்களின் தகுதியாம்சங்கள் மூப்பர்களின் தகுதியாம்சங்களுக்கு ஒப்பான கட்டுத்திட்டமாக இராவிட்டாலும் அத்தகுதியாம்சங்கள் இவர்களுக்கும் தேவையானதே "அந்தப்படியே" எனும் பதம் (1 தீமோ 3:8) மூப்பர்கள் சபையை நடத்திச் செல்லத் தேவையான தகுதிகள் எதுவோ அந்தப்படியான தகுதியாம்சங்கள் உதவிக்காரர்களும் தங்கள் பதவிக்கும், ஊழியத்திற்கும் பெற்றிருத்தல் அவசியமாகும் தேவையான அந்த தகுதியாம்சங்கள் இரண்டு வசனப்பகுதிகளில் பட்டியலிடப்பட்டுள்ளன (அப் 6:3, 1 தீமோ 3:8-10,12) அவைகள் மூன்று எண்ணங்களை வலியுறுத்துகின்றன. அவைகள் முறையே நடத்தை, திறமை மற்றவர்களுடன் கூடிய உறவு முறை என்பன

**சம்பந்தப்பட்ட நான்கு தனிப் பண்புகள்**

1. ஆழ்ந்த சிந்தனை சமநிலையில் சிந்திக்கத்தக்க உயர்ந்த எண்ணம் மற்றும் முதிர்ச்சி தேவை.
2. இருநாக்குள்ளவர்களாயிருக்க கூடாது, வாய்மையே திறவுகோள் எல்லா மனுஷரோடும் எப்பொழுதும் நேர்மையாக ஒருவர் இருக்க வேண்டும், இரட்டை வேஷம் போடுபவனாயிருக்கக் கூடாது.
3. மதுபான பிரியராயிருக்கக் கூடாது, ஆரோக்கியத்திற்காக கொஞ்சம் தண்ணீர் அருந்துவது போல கொஞ்சம் (ஒயின்) மதுபானமும் அருந்-தப்பட்டது. ஆனால் போதைக்காகவோ, பிற நோக்கத்திற்காகவோ மதுபானம் அருந்துவது குறித்த இங்கே எச்சரிக்கப்படுகிறது. மற்ற கிறிஸ்தவர்களைப் போலவே, உதவிக்காரர்களும் வெறிதரும் மதுபான பிரியத்தை தவிர்க்க வேண்டும்.
4. இழிவான ஆதயத்தை இச்சிக்கிறவனாயிருக்க கூடாது. மனுஷர்கள் பண ஆசையுள்ளவர்களாகவோ, இச்சையுள்ளவர்களாயிருக்க கூடாது.

**மூன்று முக்கியத்துவம் வாய்ந்த திறமைகள்**

1. விசுவாசத்தின் இரகசியத்தை அந்த மனசாட்சியிலே காத்துக் கொள்ள வேண்டும்.
2. தேவனுடைய வசனத்தின்படி நிலைத்திருக்கவும், அதன்

வரையறைக்குள் ஊழியம் செய்யவும் தெளிவாக அவ்வசனங்களை புரிந்து கொள்ளுதல் அவசியமாகும்.

பரிசுத்த ஆவியில் நிறைந்தவர்களாயிருக்க வேண்டும். விசுவாசத்தினாலே பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசம் பண்ணுகிறார் (கலா 3:14) அந்த விசுவாசம் தேவனுடைய வசனத்தினால் வருகிறது (ரோம 10:17) ஏவுதலினால் கொடுக்கப்பட்ட வசனத்தால் இந்த உதவிக்காரர்கள் வழி நடத்தப்பட வேண்டும்.

3. ஞானத்தால் நிறைந்திருக்க வேண்டும். தங்களுக்கு கொடுக்கப்பட்ட கடமைகளை செயல்படுத்த உதவிக்காரர்களாக நியமனம் பெற்றவர்கள் பொது அறிவைப் பெற்று நல்லதொரு தீர்ப்பை வழங்க வேண்டும்.

**மற்றவர்களுடன் நடந்து கொள்ள வேண்டிய மூன்று காரியங்கள்**

1. ஒரே மனைவியையுடைய புருஷன், உதவிக்காரனாக பணியாற்ற விரும்புகிறவர்கள் ஒரே ஒரு மனைவியை உடையவராக இருக்க வேண்டும்.
2. தன் சொந்த குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவர்களாய் இருக்க வேண்டும், தன் குடும்பத்தை நன்றாய் நடத்துவது, மற்றவைகளையும் அவர் நன்றாக நடத்துவார் என்பதற்கு அடையாளமாகும்.
3. குற்றமற்றவராக, நற்சாட்சி பெற்றிருக்க வேண்டும். ஒருவருடைய நடத்தை, சமுதாயத்திலும் சபையிலும் பெறும் பெயரைக் கொண்டு அமைகிறது. ஒன்று அது உதவிகரமாக இருக்கலாம் அல்லது இடையூறாக இருக்கலாம்.

**உதவிக்காரர்களை தேர்ந்தெடுத்தல்**

உதவிக்காரர்களை நியமிப்பது குறித்து கூறப்பட்டுள்ள வசன விவரங்கள் மிகவும் குறைவே "...நற்சாட்சி பெற்றிருக்கிற.. பேரை உங்களில் தெரிந்து கொள்ளுங்கள்; அவர்களை (அப்போஸ்தலர்களாகிய நாங்கள்) ... ஏற்படுத்துவோம் என்று சகோதரர்களுக்கு அறிவிக்கப்பட்டது. (அப் :6:3) உதவிக்காரர்களை நியமிக்கிற விஷயத்தில் எப்படிப்பட்ட அணுகு-முறையைக் கையாண்டலும் சரி, சபையின் முன்னோடிகள் அங்கத்தினர்களின் ஆலோசனைகளுக்கும் இடமளித்து ஏற்புடைய நபர்களை உதவிக்காரர்களாக நியமிக்கலாம். அப்போஸ்தலர் 6ம் அதிகாரத்தின் வசனப் பகுதி, சூழ்நிலைக்கேற்ப தேவைகளின் அடிப்படையில் எப்பொழுது உதவிக்காரர்கள் நியமிக்கப்பட வேண்டும் எத்தனைபேர் நியமிக்கப்பட வேண்டும் என்பதை வெளிப்படுத்துகிறது.

**உதவிக்காரர்களின் கடமைகள்**

உதவிக்காரர்களின் பணிகள் உட்பட அனைத்து சபையின் ஊழியங்களும் மூப்பர்களால் கண்காணிக்கப்பட வேண்டும் (அப் 20:28, எபிரேயர்

13:7,17) குறிப்பிடப்பட்ட "இந்த வேலைக்காக" நியமனம் பண்ணப்படும்போது, உதவிக்காரர்கள் அவ்வேலையைக் குறித்த அதிகாரத்தைப் பெறுகின்றனர். (அப் 6:3) நியமிக்கப்படும். ஒவ்வொரு உதவிக்காரனுக்கும் ஒதுக்கப்படும் பொறுப்புகள் குறித்து சம்பந்தப்பட்ட அந்த உதவிக்காரரும், அனைத்து மூப்பர்களாலும் முழு சபையாரும் தெளிவாக அறிந்திருத்தல் வேண்டும். தங்களுக்கு அளிக்கப்பட்ட ஊழியங்களான உலகப் பிரகாரமான, மாம்ச ரீதியான தர்மகாரியங்கள், மற்றும் ஊழியம் சம்பந்தப்பட்டக் காரியங்கள் போன்ற அனைத்து வசன ரீதியான பணிகளில், உதவிக்காரர்கள் மூப்பர்களுக்கு உதவி செய்ய வேண்டும்.

### கடமைகளை நிறைவேற்றுதல்

உதவிக்காரர்கள் தங்கள் கடமைகளையும், மற்றவர்கள் அவரவர் கடமைகளையும் செய்யாமல் தவிர்ப்பதால், அநேக பிராந்திய சபைகள் மிகவும் பாதிக்கப்படுகிறது. ஊழியம் குறித்த தீர்மானங்கள் வெறும் பேச்சளவிலோ அல்லது தாள்களில் எழுதி வைத்த அளவிலோ மட்டும் நிறுத்தப்படுமாகில், ஊழியத்தைக் குறித்த முக்கிய திட்டங்கள் எல்லாம் சாதிக்கப்போவது ஏதோ கொஞ்சமோ, அல்லது ஒன்றுமேயில்லை என்று சொல்லக்கூடிய அளவில்தான் இருக்கும். ஒரு குறிப்பிட்ட பணி ஒதுக்கப்படும்வரை, ஒரு உதவிக்காரன் செயலாற்ற இயலாது, ஆயினும் பொறுப்பு கொடுக்கப்படும் போது அந்த உதவிக்காரன் தனது பொறுப்பை நிறைவேற்ற துரிதமாக இறங்கி, அந்தப்பணி நிறைவு பெறுவதை உறுதி செய்தல் அவசியம் மூப்பர்களால் தனக்கு அளிக்கப்பட்ட வழிநடத்தலுக்குட்பட்ட நியதியில், ஒரு உதவிக்காரன் உடனடியாகத் தீர்மானித்து, துரிதமாக செயல்படுத்தி தனது பணியை நிறைவு செய்ய வேண்டும்.

### கருத்தாய்வுகள்

உதவிக்காரர்களின் பணி இன்றியமையாதது. அவர் ஒரு மூப்பர் அல்ல, ஒருவேளை மூப்பர் ஆக முடியாமலேயே போகலாம். தனது உதவிக்காரர் பணி தாம் மூப்பராக ஒரு படியாக பயன்படுத்த வேண்டிய கட்டாயமில்லை. உதவிக்காரரின் ப்ணியை உணர்ந்து, உதவிக்காரராகவே பணியாற்றலாம். உதவிக்காரர்கள் பாராட்டும் பெறத்தக்க வகையில் பணியாற்றுவது அவசியம். தங்கள் அலுவல்களை மூப்பர்கள் நன்கு பயன்படுத்தும் போது தங்களுக்கு "நல்ல நிலையையும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தில் மிகுந்த தைரியத்தையும் அடைவார்கள் (1தீமோ 3:13மூ)

நல்ல உதவிக்காரர்கள் அமைவது ஒரு பெரிய ஆசீர்வாதம் அப்போஸ்தலர் 6:6 அதிகாரத்தின் படி, உதவிக்காரர்கள் நியமிக்கப்பட்ட பொழுது, முறுமுறுப்புக்கள் நிறுத்தப்பட்டன, வசனம் விருத்தியடைந்தது, சீஷர்களின் தொகை பெருகியது, உதவிக்காரர்கள் விசுவாசத்திலும், ஊழியத்திலும் பெருகினார்கள். (அப்பேஸ்தலர் 6: 7,8) இன்று சபைக்கு நல்ல மூப்பர்கள் தேவைப்படுவது போலவே, ஆற்றலும், ஆவலும் மிக்க உதவிக்காரர்களும் தேவை.


தமிழில்: **ஆறுமுகம்.**



# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45 - 9.00 p.m.<br>9.00 - 9.15 p.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Sun, Mon<br>Tue, Thu | 2.00 - 2.15 p.m. | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore - 560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum - 695 034 | P.K. Varghese |



***Please write to these address for Bible***
***Correspondence Courses,***
***Magazines and other Christian Literatures***

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

REGISTERED NEWS PAPER
Postal Regn. No. TN/WR/ER/77/2001.
Licensed to Post without Pre Payment No. TN/ WR / ERD / 03 / WPP / 2001.
RNI No. 47661/87 - NEW DELHI

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக்
கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு

## ஓர் இனிய செய்தி.

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு
செய்யப்பட்ட, அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில்
நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்.
இது 15 பாடங்களைக் கொண்ட

## ஓர் இலவசப் பயிற்சி.

இப்பயிற்சியை வெற்றிகரமாக
முடிப்பவர்களுக்கு **சான்றிதழ்** வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

*இயக்குநர்,*
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி,**
த.பெ.எண் - 27, காங்கேயம் - 638 701. தமிழ்நாடு, இந்தியா.

Published by **Church of Christ, Kangayam.**
Printed at Konar Printers, Madurai - 625 012. Editor : **S.RAJANAYAGAM,**